*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2011.03.09 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "கார் லேன்ட் சேல் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு அறிய முடிகிறது.*

*அவ்வாறு இயங்காமல் இருப்பதற்கு தகுந்த காரணங்கள் காட்டப்படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "கார் லேன்ட் சேல் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் பெயர், கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் அதிபதி தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.*

*தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன,*
*கம்பனிகள் பதிவாளர் அதிபதி.*

*பீவீ 77633*
*கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,*
*இல. 400, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,*
*கொழும்பு 10,*
*2019, செத்தெம்பர் 21.*

*10-323*

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

394 (3) ஆம் பிரிவின் கீழான "குரோம்இட் (பீவீஉ) எல்டீடி" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2009.09.10 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "குரோம்இட் (பீவீஉ) எல்டீடி' எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு அறிய முடிகிறது.

அவ்வாறு இயங்காமல் இருப்பதற்கு தகுந்த காரணங்கள் காட்டப்படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "குரோம்இட் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் பெயர், கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் அதிபதி தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.

தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன,
கம்பனிகள் பதிவாளர் அதிபதி.

பீவீ 69117
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2019, செத்தெம்பர் 21.

10-324

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

394 (3) ஆம் பிரிவின் கீழான "வாஷிஷ்டா புரொஜெக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2015.01.16 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட " வாஷிஷ்டா புரொஜெக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு அறிய முடிகிறது.

அவ்வாறு இயங்காமல் இருப்பதற்கு தகுந்த காரணங்கள் காட்டப்படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது " வாஷிஷ்டா புரொஜெக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் பெயர், கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் அதிபதி தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.

தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன,
கம்பனிகள் பதிவாளர் அதிபதி.

பீவீ 103302
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2019, செத்தெம்பர் 21.

10-325

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

394 (3) ஆம் பிரிவின் கீழான "பார்ட்டிசிபன்ட் (பிறைவேட்) லிமிட்டெட்" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2015.11.18 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "பார்ட்டிசிபன்ட் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு அறிய முடிகிறது.

அவ்வாறு இயங்காமல் இருப்பதற்கு தகுந்த காரணங்கள் காட்டப்படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "பார்ட்டிசிபன்ட் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் பெயர், கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் அதிபதி தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.

தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன,
கம்பனிகள் பதிவாளர் அதிபதி.

பீவீ 109874,
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2019, செத்தெம்பர் 21.

10-326

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்**

394 (3) ஆம் பிரிவின் கீழான "அட்வான்டேஜ் மைகிரேஷன் கன்சல்டன்சி (பிறைவேட்) லிமிட்டெட்" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2016.08.09 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "அட்வான்டேஜ் மைகிரேஷன் கன்சல்டன்சி (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு அறிய முடிகிறது.*

*அவ்வாறு இயங்காமல் இருப்பதற்கு தகுந்த காரணங்கள் காட்டப்பபடாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "அட்வான்டேஜ் மைகிரேஷன் கன்சல்டன்சி (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் பெயர், கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் அதிபதி தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.*

*தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன,*
*கம்பனிகள் பதிவாளர் அதிபதி.*

*பீவீ 115627,*
*கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,*
*இல. 400, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,*
*கொழும்பு 10,*
*2019, செத்தெம்பர் 21.*

*10-327*

---

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்**

394 (3) ஆம் பிரிவின் கீழான "எல் சீ குரூப் ஒப் என்ஜினியரிங் (பீவீஉ) எல்டீடி" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2014.03.20 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "எல் சீ குரூப் ஒப் என்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு அறிய முடிகிறது.*

*அவ்வாறு இயங்காமல் இருப்பதற்கு தகுந்த காரணங்கள் காட்டப்பபடாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "எல் சீ குரூப் ஒப் என்ஜினியரிங் (பீவீஉ) எல்டீடி" எனும் பெயர், கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் அதிபதி தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.*

*தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன,*
*கம்பனிகள் பதிவாளர் அதிபதி.*

*பீவீ 97689,*
*கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,*
*இல. 400, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,*
*கொழும்பு 10,*
*2019, செத்தெம்பர் 21.*

*10-328*

---

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்**

394 (3) ஆம் பிரிவின் கீழான "சர்ஜி டூல்ஸ் (பீவீஉ) எல்டீடி" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2011.08.04 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "சர்ஜி டூல்ஸ் (பீவீஉ) எல்டீடி" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு அறிய முடிகிறது.*

*அவ்வாறு இயங்காமல் இருப்பதற்கு தகுந்த காரணங்கள் காட்டப்பபடாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "சர்ஜி டூல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் பெயர், கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் அதிபதி தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.*

*தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன,*
*கம்பனிகள் பதிவாளர் அதிபதி.*

*பீவீ 78693,*
*கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,*
*இல. 400, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,*
*கொழும்பு 10,*
*2019, செத்தெம்பர் 21.*

*10-329*

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்**

*394 (3) ஆம் பிரிவின் கீழான "சமயவர்தன பக்கேஜிங் எல்டீடி" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்*

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2012.10.22 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "சமயவர்தன பக்கேஜிங் எல்டீடி" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு அறிய முடிகிறது.*

*அவ்வாறு இயங்காமல் இருப்பதற்கு தகுந்த காரணங்கள் காட்டப்படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "சமயவர்தன பக்கேஜிங் எல்டீடி" எனும் பெயர், கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் அதிபதி தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.*

*தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிறிவர்த்தன,*
*கம்பனிகள் பதிவாளர் அதிபதி.*

*பீபி 5078,*
*கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,*
*இல. 400, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,*
*கொழும்பு 10,*
*2019, செத்தெம்பர் 21.*

*10-330*

---

**நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அறிவித்தல் (பதிவு இல. பிகியு 118)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.06.26 அன்று கீழ்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளமை இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-*

*7 பிளாஸ்ரிக் இன்டஸ்ரீஸ் (பிரைவட்) லிமிட்டெட்*

*"பிணைப்படுத்தியவர் மற்றும் அடமானதாரராகிய 7 பிளாஸ்ரிக் இன்டஸ்ரீஸ் (பிரைவட்) லிமிட்டெட் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு மஹதெல்கே சஜானி கமிலியா பீரிஸ்ஸினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018.10.11 ஆந் திகதிய 1340 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் இதனுடனுள்ள அட்டவணையில் மேலும் பூரணமாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் கட்டடங்கள், உரிமைகளை ஈடாக மற்றும் அடமானமாக இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 ஐச் சேர்ந்த நேஷன்ஸ் டிரஸ்ட் பீஎல்சீ சார்பில் 7 பிளாஸ்ரிக் இன்டஸ்ரீஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டினால் பெறப்பட்ட நிதி வசதிகளின் உரிய மீள் கொடுப்பனவுக்கு பிணையாக வைத்துள்ளதாலும்,*

*மற்றும் குறிப்பிட்ட 7 பிளாஸ்ரிக் இன்டஸ்ரீஸ் (பிரைவேட்) லிமிட்டெட் குறித்த முறி மூலம் உத்தரவாதமளிக்கப்பட்ட வசதிகளின் மீதான செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவை செலுத்தத் தவறியுள்ளமையினாலும்,*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் அளிக்கப்பெற்ற தத்துவங்களின் கீழ் :-*

*1. 2019.01.30 ஆந் திகதியன்று மேலதிகப்பற்று வசதியில் செலுத்தவேண்டிய தொகையாகவுள்ள பத்து மில்லியன் முன்னூற்றி அறுபதாயிரத்து ஐந்நூற்று பதினெட்டு ரூபா தொண்ணூற்று நான்கு சதம் (ரூ. 10,360,518.94) தொகையையும் 2019.01.30 ஆந் திகதியன்று நிலுவைத் தொகையாகவுள்ள பத்து மில்லியன் இருநூற்றி பத்தொன்பதாயிரத்து ஐம்பத்தொரு ரூபா அறுபத்திரெண்டு சதம் (ரூ. 10,219,051.62) தொகை மீது இணங்கப்பட்டபடி 2019.01.31 ஆந் திகதியிலிருந்து கூடுதலான வட்டியையும்;*

*2. 2019.01.30 ஆந் திகதியன்று தவணைக்கடன் வசதியில் செலுத்த வேண்டிய தொகையாகவுள்ள பதினைந்து மில்லியன் எழுநூற்றெட்டாயிரத்து இருநூற்றி ஐம்பத்தெட்டு ரூபா நாற்பத்தேழு சதம் (ரூபா 15,708,258.47) தொகையையும் 2019.01.30 ஆந் திகதியன்று மூலதன நிலுவைத் தொகையாகவுள்ள பதினைந்து மில்லியன் (ரூபா 15,000,000.00) தொகை மீது இணங்கப்பட்டபடி 2019.01.31 ஆந் திகதியிலிருந்து கூடுதலான வட்டியையும்,*

*உதவியாளர் செலவு, நியதிச் சட்டத் தீர்வைகள், விளம்பரச் செலவுகளைச் சேர்த்து மற்றும் அதன் பின் ஏற்பட்ட ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, கட்டடங்கள் உரிமைகளை கொழும்பு-12, புதுக்கடை வீதி, இல. 200, இலுள்ள அனுமதிபெற்ற ஏலதாரர், திரு. எல். பி. சேனாநாயக்கவினால் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட வேண்டுமென்று இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.".*

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குரு கோரளை, றாகம் பற்று பேலியகொடை நகர சபை எல்லைக்குள் களனி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கங்கபட 174B கிராம அலுவலர் பிரிவிலுள்ள பேலியகொடையில் அமைந்த மரங்கள், தோட்டங்கள் மற்றும் அதில் எழுந்து நிற்கும் எல்லாம் சேர்த்து

"கஹடகஹக் கும்புற" என அழைக்கப்படும் காணிக்கு அனுமதி பெற்ற நில அளவையாளர் ஆர். யு. விஜேதுங்க தயாரித்த 2006.11.20 ஆந் திகதிய 10086/2006 ஆம் இலக்க வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் 3A எனக் குறிக்கப்பட்டுள்ளது. மற்றும் குறித்த லொட் 3A ஆனது வடக்கு: வரைபட இலக்கம் 12/2013 இலுள்ள லொட் 2 ; கிழக்கு: வரைபட இலக்கம் 12/2013 இலுள்ள லொட்கள் 4 மற்றும் 5 ; தெற்கு : சரத் ஜயவீரவினுடைய காணி மற்றும் ; மேற்கு : ஜி. என். ரி. நிமாலினுடைய காணியைப் பிரிக்கும் பள்ளம் எல்லைகளைக் கொண்டுள்ளது. மற்றும் 10086/2006 ஆம் இலக்க நில அளவை வரைபடத்தின்படி பதினொரு தசம் நான்கு பூச்சியம் பேச்சஸ் (0ஏ.0றூ.11.40பே.) விஸ்தீரணத்தைக் கொண்டது. கொழும்பு காணிப் பதிவகத்தில் வொலியும்/போலியோ G 139/117 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. (குறிப்புகள் நிரலில்)

அனுமதி பெற்ற நிலஅளவையாளர் ஆர். யு. விஜேதுங்க தயாரித்த 2006.11.20 ஆந் திகதிய 10086/ 2006 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள லொட் 3A ஆனது கீழ்வருபனவற்றின் மீளளவை ஆகும்.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குரு கோரளை, றாகம் பற்று, பேலியகொடை நகர சபை எல்லைக்குள் களனி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கங்கபட 174B கிராம அலுவலர் பிரிவிலுள்ள பேலியகொடையில் அமைந்த மரங்கள், தோட்டங்கள் மற்றும் அதில் எழுந்து நிற்கும் எல்லாம் சேர்த்து "கஹடகஹக் கும்புற" என அழைக்கப்படும் காணிக்கு அனுமதி பெற்ற நில அளவையாளர் ரி. பி. டி. டபிள்யூ. நாணயக்கார தயாரித்த 2003.11.20 ஆந் திகதிய 12/ 2003 ஆம் இலக்க வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் 3 எனக் குறிக்கப்பட்டுள்ளது. மற்றும் குறித்த லொட் 3 ஆனது: வடகிழக்கில் : லொட்கள் 2, 4 மற்றும் 5 ; தென்கிழக்கில் : லொட்கள் 4 மற்றும் 5 மற்றும் சரத் ஜயவீரவினுடைய காணி ; தென்மேற்கில் : சரத் ஜயவீரவினுடைய காணி ; வடமேற்கில் : ஜி. என். ரி. நிமாலினுடைய காணியைப் பிரிக்கும் பள்ளம் மற்றும் லொட் 2 என்ற எல்லைகளைக் கொண்டுள்ளது. மற்றும் 12/ 2003 ஆம் இலக்க நில அளவை வரைபடத்தின்படி பதினொரு தசம் நான்கு பூச்சியம் பேச்சஸ் (0ஏ.0றூ.11.40பே.) விஸ்தீரணத்தைக் கொண்டது. கொழும்பு காணிப்பதிவகத்தில் வொலியும்/போலியோ G 139/117 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அதனோடு சேர்த்து அனுமதி பெற்ற நில அளவையாளர் ரி. பி. டி. டபிள்யூ. நாணயக்கார தயாரித்த 2003.11.20 ஆந் திகதிய 12/ 2003 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள லொட் 5 மேலாக பாதை உரிமை மற்றும் ஏனைய உரிமைகள்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

10-355

## நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அறிவித்தல் (பதிவு இல. பிகியு 118)*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.06.26 அன்று கீழ்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளமை இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

ருவன் பத்திரனகே குமுது பிறியதர்ஷனி ருவன் பத்திரன மற்றும் வேக்கடகே களு மஹத்மயா மறுபெயர் ஜெயநெத்தி கோரலாலாகே களு மஹத்தயா

"பிணைப்படுத்தியவர் மற்றும் அடமானதாரராகிய ருவன் பத்திரனகே குமுது பிறியதர்ஷனி ருவன் பத்திரன மற்றும் வேக்கடகே களு மஹத்மயா மறுபெயர் ஜெயநெத்தி கோரலாலாகே களு மஹத்தயா இரத்தினபுரியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டி. பி. ஏ. இனோகா ஷியாமினி ஜெயசேகரவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016.01.27 ஆந் திகதிய 1411 ஆம் இலக்கம் கொண்ட ஈட்டுமுறி மூலம் இதனுடனுள்ள அட்டவணையில் மேலும் பூரணமாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் கட்டடங்கள், உரிமைகளை ஈடாக மற்றும் அடமானமாக இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 ஐச் சேர்ந்த நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ சார்பில் ருவன் பத்திரனகே குமுது பிறிய தர்ஷனி ருவன் பத்திரன மற்றும் வேக்கடகே களு மஹத்மயா மறுபெயர் ஜெயநெத்தி கோரலாலாகே களு மஹத்தயாவினால் பெறப்பட்ட நிதி வசதிகளின் உரிய மீள் கொடுப்பனவுக்கு பிணையாக வைத்துள்ளதாலும்,

மற்றும் குறிப்பிட்ட ருவன் பத்திரனகே குமுது பிறிய தர்ஷனி ருவன் பத்திரன மற்றும் வேக்கடகே களு மஹத்மயா மறுபெயர் ஜெயநெத்தி கோரலாலாகே களு மஹத்தயா குறித்த முறி மூலம் உத்தரவாதமளித்த வசதிகளின் மீதான செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவை செலுத்தத் தவறியுள்ளமையினாலும்,

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் அளிக்கப்பெற்ற தத்துவங்களின் கீழ் :-

2018.07.10 ஆந் திகதியன்று செலுத்த வேண்டிய தொகையாகவுள்ள எட்டு மில்லியன் நாநூற்றி ஐம்பத்திரெண்டாராயிரத்து முப்பத்தாறு ரூபா ஒரு சதம் (ரூ. 8,452,036.01) தொகையையும் 2018.07.10 ஆந் திகதியன்று நிலுவைத் தொகையாகவுள்ள எட்டு மில்லியன் இருநூற்றி தொண்ணூற்றாறாயிரத்து ஐநூற்றி முப்பத்தேழு

ரூபா இருபத்து நான்கு சதம் (ரூ. 8,296,537.24) தொகை மீது இணங்கப்பட்டபடி 2018.07.11 ஆந் திகதியிலிருந்து கூடுதலான வட்டியையும்; உதவியாளர் செலவு, நியதிச் சட்டத் தீர்வைகள், விளம்பரச் செலவுகளைச் சேர்த்து மற்றும் அதன் பின் ஏற்பட்ட ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, கட்டடங்கள் உரிமைகளை கொழும்பு-12, புதுக்கடை வீதி, இல. 200, இலுள்ள அனுமதி பெற்ற ஏலதாரர், திரு. எல். பி. சேனாநாயக்கவினால் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட வேண்டுமென்று இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.".

**அட்டவணை**

1. சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், கொலன்னா கோரளை, தியபொத்த கம் பற்று, எம்பிலிபிற்றிய பிரதேச செயலாளர் பிரிவினில் எம்பிலிபிற்றிய மாநகர சபை எல்லைக்குள் அமைந்த மொறகெற்றியவில் 214 C கிராம அலுவலர் பிரிவில் பல்லேகம கிராமத்தில் அமைந்த "(மு. கி. வ. 779 இன் லொட் 2360) (சீட் இல. மு. கி. வ. 779/ 17)" என அழைக்கப்படும் மற்றும் அறியப்படும் காணிக்கு நில அளவையாளர் நாயகத்தினால் தயாரித்த 779/17 ஆம் இலக்க வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் 2360 என குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றும் குறித்த லொட் 2360 ஆனது : வடக்கு: வீதி ஒதுக்கீட்டு இலக்கம் 2358 மற்றும் காணி இலக்கம் 2361 ; கிழக்கு: காணி இலக்கம் 2361; தெற்கு : வீதிக்கான அணுகல் இலக்கம் 2450 மற்றும் கால்வாயுடன் சேர்த்து ஒதுக்கு நிலம் ; மேற்கு : காணி இலக்கம் 2359 மற்றும் வீதி ஒதுக்கீட்டு இலக்கம் 2358. எல்லைகளைக் கொண்டுள்ளது. மற்றும் கட்டடங்கள், தோட்டங்கள் மற்றும் அதில் எழுந்து நிற்கும் எல்லாவற்றையும் சேர்த்து பூச்சியம் தசம் இரண்டு பூச்சியம் இரண்டு ஹெக்டேயர் (0.202 ஹெக்டேயர்) விஸ்தீரணத்தைக் கொண்டது மற்றும் எம்பிலிபிற்றிய காணிப்பதிவகத்தில் வெலியும் Bix /4010 கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2. சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், கொலன்னா கோரளை, தியபொத்த கம் பற்று, எம்பிலிபிற்றிய பிரதேச செயலாளர் பிரிவினில் எம்பிலிபிற்றிய மாநகர சபை எல்லைக்குள் அமைந்த மொறகெற்றியவில் 214 C கிராம அலுவலர் பிரிவில் பல்லேகம கிராமத்தில் அமைந்த "(மு. கி. வ. 779 இன் லொட் 2360) (சீட் இல. மு. கி. வ. 779/17)" என அழைக்கப்படும் மற்றும் அறியப்படும் காணிக்கு அனுமதி பெற்ற நில அளவையாளர் எஸ். பி. பிறேமரத்ன தயாரித்த R/624 ஆம் இலக்க வரைபத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் 01 என குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றும் குறித்த லொட் 01 ஆனது : வடக்கு: பிரதான வீதி, முந்திய கிராம வரைபடம் 779 இலுள்ள லொட் 2358 ; கிழக்கு: முந்திய கிராம வரைபடம் 779 இலுள்ள லொட் 2361; தெற்கு: முந்திய கிராம வரைபடம் 779 இலுள்ள லொட் 2450; மேற்கு : முந்திய கிராம வரைபடம் 779 இலுள்ள லொட் 2359 எல்லைகளைக் கொண்டுள்ளது. மற்றும் கட்டடங்கள், தோட்டங்கள் மற்றும் அதில் எழுந்து நிற்கும் எல்லாவற்றையும் சேர்த்து இரண்டு றூட் (0ஏ.2றூ.0பே.) விஸ்தீரணத்தைக் கொண்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
குழுக் கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

10-356

---

**நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அறிவித்தல் (பதிவு இல. பிகியு 118)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.06.26 அன்று கீழ்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளமை இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

ஷமிலா பிரபாத் அபேவிக்ரம விஜேவர்தன சூரிய ஆராச்சி

"பிணைப்படுத்தியவர் மற்றும் அடமானதாரராகிய ஷமிலா பிரபாத் அபேவிக்ரம விஜேவர்தன சூரிய ஆராச்சி கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பி. என். பேர்னடேற் பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.11.24 ஆந் திகதிய 10611 ஆம் இலக்கம் கொண்ட 2014.11.24 ஆந் திகதிய 10613 ஆம் இலக்கம் கொண்ட 2016.01.13 ஆந் திகதிய 11065 ஆம் இலக்கம் கொண்ட ஈட்டுமுறிகள் மூலம் இதனுடனுள்ள அட்டவணையில் மேலும் பூரணமாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் கட்டடங்கள், உரிமைகளை ஈடாக மற்றும் அடமானமாக இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 ஐச் சேர்ந்த நேஷன்ஸ் டிரஸ்ட் பீஎல்சீ சார்பில் ஷமிலா பிரபாத் அபேவிக்ரம விஜேவர்தன சூரிய ஆராச்சியினால் பெறப்பட்ட நிதி வசதிகளின் உரிய மீள் கொடுப்பனவுக்கு பிணையாக வைத்துள்ளதாலும்,

மற்றும் குறிப்பிட்ட ஷமிலா பிரபாத் அபேவிக்ரம விஜேவர்தன சூரிய ஆராச்சி குறித்த முறி மூலம் உத்தரவாதமளித்த வசதிகளின் மீதான

செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவை செலுத்தத் தவறியுள்ளமையினாலும்,

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் அளிக்கப்பெற்ற தத்துவங்களின் கீழ் :-

1. 2019.04.15 ஆந் திகதியன்று மேலதிகப்பற்று வசதியில் செலுத்த வேண்டிய தொகையாகவுள்ள பதினொரு மில்லியன் நூற்று மூன்றாயிரத்து இருநூற்றி இருபத்தெட்டு ரூபா பதினைந்து சதம் (ரூ. 11,103,228.15) தொகையையும் 2019.04.15 ஆந் திகதியன்று நிலுவைத் தொகையாகவுள்ள பத்து மில்லியன் தொளாயிரத்து எழுபத்தெட்டாயிரத்து எண்ணூற்று இருபத்தி மூன்று ரூபா எண்பத்தொரு சதம் (ரூ. 10,978,823.81) தொகை மீது இணங்கப்பட்டபடி 2019.04.16 ஆந் திகதியிலிருந்து கூடுதலான வட்டியையும்;

2. 2019.04.16 ஆந் திகதியன்று தவணைக் கடன் வசதியில் செலுத்த வேண்டிய தொகையாகவுள்ள மூன்று மில்லியன் தொளாயிரத்து ஐம்பத்தேழாயிரத்து நூற்றி எண்பத்தி மூன்று ரூபா எழுபத்தாறு சதம் (ரூபா 3,957,183.76) தொகையையும் 2019.04.16 ஆந் திகதியன்று மூலதன நிலுவைத் தொகையாகவுள்ள மூன்று மில்லியன் எழுநூற்றி பதினைந்தாயிரத்து அறுபத்திநான்கு ரூபா நாற்பத்தைந்து சதம் (ரூபா 3,715,064.45) தொகை மீது இணங்கப்பட்டபடி 2019.04.17 ஆந் திகதியிலிருந்து கூடுதலான வட்டியையும்,

உதவியாளர் செலவு, நியதிச் சட்டத் தீர்வைகள், விளம்பரச் செலவுகளைச் சேர்த்து மற்றும் அதன் பின் ஏற்பட்ட ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, கட்டடங்கள் உரிமைகளை கொழும்பு-12, புதுக்கடை வீதி, இல. 200, இலுள்ள அனுமதிபெற்ற ஏலதாரர், திரு. எல். பி. சேனாநாயக்கவினால் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட வேண்டுமென்று இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.".

### அட்டவணை

தென் மாகாணம், காலி மாவட்டம், நான்கு பட்டணமும் சூழலுமுள்ள அக்மீமன பிரதேச சபை எல்லைக்குள் வளகந்ததுவவில் அமைந்த (வளஹந்ததுவ எஸ்டேட் மறுபெயர் கல்கமுகந்த கொற்றஸ் என அழைக்கப்படும் காணிக்கு அனுமதி பெற்ற நில அளவையாளர் ரி. விஜேசிங்க தயாரித்த 1970.08.28 ஆந் திகதிய 720 ஆம் இலக்க வரைபத்திலுள்ள லொட்கள் 59 மற்றும் 59A என்பவற்றின் ஒன்றிணைப்பாகும்) காணிக்கு அனுமதி பெற்ற நில அளவையாளர் டபிள்யூ. எஸ். எஸ். அம்பவத்த தயாரித்த 2000.10.14 ஆந் திகதிய 396 ஆம் இலக்க வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் අ என குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றும் குறித்த லொட் අ ஆனது : வடக்கு: கல்கமுகந்தவின் மீதமுள்ள பகுதி ; கிழக்கு: லொட்கள் 60 மற்றும் 60 A ; தெற்கு : வீதி மற்றும்; மேற்கு : லொட் 58 மற்றும் கல்கமுகந்தவின் மீதமுள்ள பகுதி எல்லைகளைக் கொண்டுள்ளது. மற்றும் குறித்த 396 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒரு றூட் (0ஏ.1றூ. 0பே.) விஸ்தீரணத்தைக் கொண்டது. காலி காணிப் பதிவகத்தில் J 56/126 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

குறித்த வரைபட இலக்கம் 396 இல் விபரிக்கப்பட்டு குறிக்கப்பட்ட லொட் අ ஆனது அண்மைய மீளளவைப்படி பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது:-

தென் மாகாணம், காலி மாவட்டம், நான்கு பட்டணமும் சூழலுமுள்ள அக்மீமன பிரதேச சபை எல்லைக்குள் 112 A கிராம அலுவலர் பிரிவில் வளகந்ததுவவில் அமைந்த (வளஹந்ததுவ எஸ்டேட் என அழைக்கப்படும் காணியின் ஒரு பகுதியான வரைபட இலக்கம் 396 இலுள்ள லொட் අ இன் மீளளவையாகும்) காணிக்கு அனுமதி பெற்ற நில அளவையாளர் யு. வேவல்வல தயாரித்த 2014.10.30 ஆந் திகதிய 2252 ஆம் இலக்க வரைபத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் A எனக் குறிக்கப்பட்டுள்ளது. மற்றும் குறித்த லொட் A ஆனது : வடக்கு: கல்கமுகந்தவின் மீதமுள்ள பகுதி ; கிழக்கு: லொட்கள் 60 மற்றும் 60A ; தெற்கு: பிரதேச சபை வீதி மற்றும் ; மேற்கு : லொட் 58 மற்றும் கல்கமுகந்தவின் மீதமுள்ள பகுதி எல்லைகளைக் கொண்டுள்ளது. மற்றும் குறித்த 2252 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒரு றூட் (0ஏ.1றூ.0பே.) விஸ்தீரணத்தைக் கொண்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
குழுக்கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

10-357

---

### இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் அறிவித்தல்

2019.08.13 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

"1. பிரசித்த நொத்தாரிசு ரீ. பீ. சீ. எதிரிசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2018.07.25 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 13849 மற்றும் பிரசித்த நொத்தாரிசு பந்துல விஜேசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2018.09.27 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இலக்கம் 10652 ஆகியவற்றின்

பேரில் நவகத்தேகம, வெலேவெவ என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. கரசிங்ஹ ஆரச்சிகே புத்ததாஸ அபயகீர்த்தி என்பவரிடமிருந்து 2019.06.26 வரை முதல் மற்றும் வட்டி கடன் வசதி I இன் மீது மூன்று மில்லியன் முந்நூற்று இருபத்தாறு ஆயிரத்து அறு நூற்று நாற்பத்தைந்து ரூபா முப்பத்தாறு சதம் (ரூபா 3,326,645.36) கடன் வசதி II இன் மீது முந்நூற்று முப்பத்தைந்து ஆயிரத்து முந்நூற்றிரெண்டு ரூபா தொண்ணூற்றேழு சதம் (ரூபா 335,302.97) நிரந்தர மேலதிகப்பற்று வசதி மீது மூன்று மில்லியன் எழுபத்தெட்டு ஆயிரத்து எழுநூற்று பதினெட்டு ரூபா ஐம்பத்து மூன்று சதம் (ரூபா 3,078,718.53) அத்துடன் கடன் வசதி I இன் தீர்க்காத மூலதனம் இரண்டு மில்லியன் ஒன்பது இலட்சத்து எழுபது ஆயிரம் ரூபாவில் (ரூபா 2,970,000.00) ஆண்டுக்கு பதினாறு (16%) வீதத்தில் 2019.06.28 ஆந் திகதி தொடக்கம் மேலும் வட்டியும், கடன் வசதி II இன் தீர்க்காத மூலதனம் முந்நூற்று இருபத்தைந்து ஆயிரம் ரூபா மீது (ரூபா 325,000.00) ஆண்டுக்கு நான்கு (4%) வீதத்தில் 2019.06.28 ஆந் திகதி தொடக்கம் மேலும் வட்டியும், நிரந்தர மேலதிக்கப்பற்று வசதி தீர்க்காத மூலதனம் இரண்டு மில்லியன் எண்ணூறு ஆயிரம் ரூபா மீது (ரூபா 2,800,000.00) ஆண்டுக்கு பதினேழு (17%) வீதத்தில் 2019.06.28 ஆந் திகதி தொடக்கம் மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்;

2. பிரசித்த நொத்தாரிசு ரீ. பீ. சீ. எதிரிசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2018.07.25 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 13849 மற்றும் பிரசித்த நொத்தாரிசு பந்துல விஜேசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2018.09.27 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இலக்கம் 10652 ஆகியவற்றின் பேரில் மேற்குறிப்பிட்ட இரண்டு கடன் வசதிகள் மற்றும் நிரந்தர மேலதிகப்பற்று வசதிக்காக வருமதியாக உள்ள ஆறு மில்லியன் எழுநூற்று நாற்பது ஆயிரத்து அறுநூற்று அறுபத்தாறு ரூபா எண்பத்தாறு சதம் (ரூபா 6,740,666.86) அத்துடன் 2018.06.27 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடு வைத்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவும் (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/ 3, விஹார மாவத்தை, கொலன்னாவ, என்னும் முகவரியைச் சேர்ந்த ரீ. அன்ட் எச். ஒக்ஷன் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித் கருணாரத்ன அவர்களுக்கும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி, குளியாபிட்டிய மேற்தரக்கிளை சிரேஷ்ட முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.''.

### அட்டவணை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், நவகத்தேகம பிரதேச செயலகப் பிரிவில் நவகத்தேகம பிரதேச சபை எல்லைகளுள் கிரிமெட்டியாவ பற்றுவயில் வெலேவெவ வடக்கு கிராம அலுவலர் பிரிவு, இல. 646/1 இல் வெலேவெவ கிராமத்தில் அமைந்த ''கொடகலே'' என அழைக்கப்படும் காணியிலிருந்து FVP 3216 இல் துண்டு 70 ஐக் கொண்டதும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் பொன் தங்கவடிவேலு தயாரித்த 1998.12.17 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 578 இல் விபரித்த துண்டு 06 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு : வடக்கு : வண்டிப்பாதையும்; தெற்கு : கனெல் வீதியும் ; கிழக்கு : துண்டு 07 உம் (பிரவேசம் மற்றும் கிணறு) ; தெற்கு : துண்டு 09 மற்றும் 10 உம் ; மேற்கு : துண்டு 05 உம் எல்லைகளாகக் கொண்டு இரண்டு ஏக்கர் (02ஏ.00றூ.00பே.) பூச்சியம் தசம் எட்டு பூச்சியம் எட்டு ஒன்பது ஹெக்டேயர்கள் (ஹெக்டேயர்கள் 0.8089) விஸ்தீரணமுடையது. இது புத்தளம் மாவட்ட காணிப்பதிவகத்தில் LDO 241/175 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) ஜே. ஏ. ஜீ. எஸ். ஜயசிங்ஹ,
சிரேஷ்ட முகாமையாளர்.

இலங்கை வங்கி,
குளியாப்பிட்டிய மேற்தரக்கிளை.

10- 409

---

### இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

ஜாஎல-நீர்கொழும்பு வீதி, இல. 80 என்னும் முகவரியைச் சேர்ந்த Ruth Styles (Pvt) Ltd கடன் பொறுப்புகளுக்காக ஜாஎல நீர்கொழும்பு வீதி, இல. 74/1/1 மற்றும் ஜாஎல, நீர்கொழும்பு வீதி, வரிமதிப்பு இல. 80 இல் அமைந்த ஈடுவைத்த ஆதனங்கள்.

2019.07.26 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

''1. பிரசித்த நொத்தாரிசு ஜே. சீ. மஹஆரச்சி அத்தாட்சிப்படுத்திய 2017.02.23 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 431 மற்றும் 2017.02.23 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 432, பிரசித்த நொத்தாரிசு சீ. எல். யாப்பா அத்தாட்சிப்படுத்திய 2018.12.11 ஆந் திகதியிட்ட மேலதிக ஈட்டு முறி இல. 1948 மற்றும் 2018.12.11 ஆந் திகதியிட்ட மேலதிக ஈட்டு முறி இல. 1949 ஆகியவற்றின் பேரில் ஜாஎல, நீர்கொழும்பு வீதி, இல. 80 என்னும் முகவரியைச் சேர்ந்த Ruth Styles (Pvt) Ltd இடமிருந்து நிரந்தர மேலதிகப்பற்று வசதி இருபது மில்லியன் ரூபா (ரூபா 20,000,000.00) தவணைக்கடன் வசதி ஐம்பது மில்லியன் ரூபா (ரூபா 50,000,000.00) மற்றும் மீள் அட்டவணைக் கடன் A வசதி இருநூற்று நாற்பத்து மூன்று மில்லியன் ரூபா

(ரூபா 243,000,000.00) ஆகியவற்றின் மீது 2019.06.23 ஆந் திகதி வரை தீர்க்காத முதல் மற்றும் வட்டி பத்தொன்பது மில்லியன் எண்ணூற்றுப் பத்தொன்பது ஆயிரத்து முந்நூற்றிரண்டு ரூபா ஐம்பத்தொன்பது சதம் (ரூபா 19,819,302.59), ஐம்பது மில்லியன் இருநூற்று அறுபத்து மூன்று ஆயிரத்து தொள்ளாயிரத்துப்பதினேழு ரூபா எண்பத்தொரு சதம் (ரூபா 50,263,917.81), இருநூற்று ஐம்பத்தெட்டு மில்லியன் அறுநூற்று அறுபத்தேழு ஆயிரத்து ஐநூற்று எட்டு ரூபா இருபத்தொரு சதம் (ரூபா 258,667,508.21) ஆகியவற்றுடன் பிரசித்த நொத்தாரிசு ஜே.சீ.மஹஆரச்சி அத்தாட்சிப்படுத்திய 2017.02.23 ஆந் திகதியிட்ட ஆரம்ப ஈட்டுமுறி இல. 431 மற்றும் 2017.02.23 ஆந் திகதியிட்ட 432 ஆகியவற்றின் பேரில் நிரந்தர மேலதிகப்பற்று வசதி தீர்க்காத முதல் பத்தொன்பது மில்லியன் அறுநூற்று இருபத்து நான்கு ஆயிரத்து எழுநூற்றுப்பத்து ரூபா நாற்பத்தொரு சதம் (ரூபா 19,624,710.41) ஆண்டுக்கு AWPLR + 3.0% வீதத்திலும், தவணைக்கடன் வசதியின் தீர்க்காத முதல் ஐம்பது மில்லியன் ரூபா (ரூபா 50,000,000.00) மீது ஆண்டுக்கு AWPLR + 7.0% வீதத்திலும், மீள் அட்டவணைக்கடன் A வசதியின் தீர்க்காத முதல் இருநூற்று நாற்பத்து மூன்று மில்லியன் (ரூபா 243,000,000.00) ரூபா மீது ஆண்டுக்கு AWPLR + 7.0% வீதத்திலும் 2019.06.24 தொடக்கம் மீள் செலுத்தும் திகதி வரை மேலும் திரளவுள்ள வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளது,

2. மேற்கூறிய ஈட்டுமுறி இல. 431, 432 ஆகியவற்றின் பேரில் வருமதியாகவுள்ள மேற்கூறிய பத்தொன்பது மில்லியன் எண்ணூற்றுப் பத்தொன்பது ஆயிரத்து முந்நூற்றிரெண்டு ரூபா ஐம்பத்தொன்பது சதம் (ரூ. 19,819,302.59) மேற்கூறிய ஈட்டு முறி இல. 431 மற்றும் 432 உடன் மேலதிக ஈட்டு முறி இலக்கங்கள் 1948 மற்றும் 1949 ஆகியவற்றின் பேரில் ஐம்பது மில்லியன் இருநூற்று அறுபத்து மூன்று ஆயிரத்து தொள்ளாயிரத்துப் பதினேழு ரூபா எண்பத்தொரு சதம் (ரூபா 50,263,917.81) மற்றும் இருநூற்று ஐம்பத்தெட்டு மில்லியன் அறுநூற்று அறுபத்தேழு ஆயிரத்து ஐநூற்று எட்டு ரூபா இருபத்தொரு சதம் (ரூபா 258,667,508.21) உடன் 2019.06.24 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் திரளவுள்ள வட்டியையும், இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடு வைத்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவும் (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ, என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் ரீ. அன்ட் எச். ஒக்ஷன் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம். எச். ரீ. கருணாரத்ன அவர்களுக்கும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி, அறவிடல் பிரிவு (அறவிடல்-தொகுதி) பிரதான முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.".

**ஈட்டு முறி இல. 431 மற்றும் ஈட்டு முறி இல. 1948 ஆகியவற்றில் குறிப்பிட்ட அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை ராகம் பற்றுவில் ஜாஎல பிரதேச சபை மற்றும் கனுவன கிராம அலுவலர் பிரிவு இல. 191 இல் ஜாஎல நகர சபை எல்லைகளுள் கனுவனயில் அமைந்த நீர்கொழும்பு வீதி, வரிமதிப்பு இல. 80 ஐக் கொண்ட "மகுல்கஹவத்த" என அழைக்கும் காணி, உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். ஜீ. குணதிலக்க தயாரித்த 2015.10.16 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 9668 இல் விபரித்த துண்டு X என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு வடக்கு : A பெரேராவின் காணியும் ; கிழக்கு : வரைபட இல. 2857 இல் துண்டு 5C யும் கே. கே. சர்வை என்பவரின் காணியும் ; தெற்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். டீ. எட்வேர்ட் தயாரித்த வரைபடம் இல. 6946 இல் துண்டு 1 உம் ; மேற்கு : இக்காணிக்கும் நீர்கொழும்பு பாதைக்குமிடையேயான பாதை நெடுகவும் ஒதுக்கீட்டையும், எல்லைகளாகக் கொண்ட பதினேழு தசம் எட்டு ஒன்று பேர்ச் (0ஏ. 0றூ.17.81பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள ஐந்து மாடிக்கட்டிடம், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

**மேற்கூறிய துண்டு X கீழ் விபரித்த காணியின் ஒரு மீளளவை ஆகும்.**

மேற்கூறிய கனுவனயில் அமைந்த மகுல்லகஹவத்த என அழைக்கப்படும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் M. D. N. பெரேரா தயாரித்த 2004.07.14 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 2860/A இல் விபரித்த துண்டு X என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த வடக்கு : A பெரேராவின் காணியும் ; கிழக்கு : வரைபட இல. 2857 இல் துண்டு 5C யும் கே. கே. சர்வை என்பவரின் காணியும் ; தெற்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். டீ. எட்வேர்ட் தயாரித்த வரைபடம் இல. 461 இல் துண்டு 2 உம் ; மேற்கு : பாதையும் (பெருந்தெரு) எல்லைகளாகக் கொண்டு பதினேழு தசம் எட்டு ஒன்று பேர்ச் (0ஏ. 0றூ.17.81பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள ஐந்து மாடிக்கட்டிடம், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது கம்பஹா காணிப் பதிவகத்தில் J 42/126 இல் பதிவுசெய்யப்பட்டது.

**ஈட்டு முறி இல. 432 மற்றும் ஈட்டு முறி இல. 1949 ஆகியவற்றில் குறிப்பிட்ட அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை ராகம் பற்றுவில் ஜாஎல பிரதேச சபை மற்றும் நகர சபை எல்லைகளுள் கனுவன கிராம அலுவலர் பிரிவு இல. 191 இல் கனுவனயில் அமைந்த நீர்கொழும்பு வீதி, வரிமதிப்பு இல. 74/1/1 ஐக் கொண்ட "பதுல்லகஹவத்த" என அழைக்கப்படும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். டீ. எட்வேர்ட் தயாரித்த 2015.09.09 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 6946 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிடப்பட்டு பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு - வடக்கு : கொழும்பு வீதி, வரிமதிப்பு இல. 80 ஐக் கொண்ட நிலமனையும் ; கிழக்கிலும் தெற்கிலும்: PF நோனிஸ் என்பவரின் நிலமனையும் ; மேற்கு : கொழும்பு, நீர்கொழும்பு பெருந்தெருவும் எல்லைகளாகக் கொண்டு பதின்மூன்று பேர்ச் (0ஏ. 0றூ.13பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள ஐந்து மாடிக்கட்டிடம், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

மேற்கூறிய துண்டு 1 கீழே விபரித்த காணியின் ஒரு மீளளவை ஆகும்.

மேற்கூறிய கணுவனயில் அமைந்த "பதுள்ளகஹவத்த" என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் M.D. எட்வேர்ட் தயாரித்த 1993.04.04 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 461 இல் விபரித்த துண்டு 2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு : வடக்கு : துண்டு 1 உம் கதமுத்து சர்வை என்பவரின் காணியும் ; கிழக்கிலும் தெற்கிலும்: PF நோனிஸ் என்பவரின் நிலமனைகளும் ; மேற்கில் : கொழும்பு நீர்கொழும்பு பெருந்தெருவும் எல்லைகளாகக் கொண்டு பதின்மூன்று பேர்ச் (0ஏ. 0றூ.13பே.) விஸ்தீரணமுடைய காணி ஆகும். இது கம்பஹா காணிப் பதிவகத்தில் J 215/ 116 இல் பதிவுசெய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதான முகாமையாளர்,
(அறவிடல் - தொகுதி).

இலங்கை வங்கி,
அறவிடல் தொகுதிப்பிரிவு,
3 ஆவது மாடி, "பி.ஓ.சீ. சதுக்கம்",
இல. 1, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 01.

10- 411

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ

1990ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கடன் கணக்கு இலக்கம் : 2188896
டெக்சி. எல்கே க்லோபல் (பிரைவேட்) லிமிட்டெட்
(Taxi. lk Global (Private) Limited)

2019.06.28 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டமொன்றில் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றிய தீர்மானமாவது :-

"குருநாகலையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு S. M. R. ஜயவர்தன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.11.16 ஆந் திகதிய 13043 ஆம் மற்றும் 2018.02.07 ஆந் திகதிய 13198 ஆம் இலக்க கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ முறிகளின்மீது கட்டுநாயக்க, பீல்லவத்த, கெமுனு மாவத்தை, இல. 170 எனும் விலாசத்தில் பதிவு அலுவலகம் அமைந்துள்ள டெக்சி எல்கே க்லோபல் (பிரைவேட்) லிமிட்டெட் கடப்பாடுடையதாகவும் திசாநயக்க முதியன்சேலாகே பிரியல் சுனெத் திசாநயக்க என்பவர் ஈட்டாளராகவும் (1 ஆம் அட்டவணையில் மேலும் விபரிக்கப் பட்டுள்ள சொத்து)

நீர்கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு V. P. டயஸ் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.11.21 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துச் சட்டத்தின்கீழ் ஈடுவைக்கப்பட்டுள்ள கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் P. L. C. முறிகளின் மீது கட்டுநாயக்க, பீல்லவத்த, கெமுனு மாவத்தை, இல. 170 எனும் விலாசத்தில் பதிவு அலுவலகத்தில் அமைந்துள்ள டெக்சி எல்கே க்லோபல் (பிரைவேட்) லிமிட்டெட் கடப்பாடுடையதாகவும் திசாநாயக்க முதியன்சேலாகே பிரியல் சுனெத் திசாநாயக்க என்பவர் ஈட்டாளராகவும் (2 ஆம் அட்டவணையில் மேலும் விபரிக்கப்பட்டுள்ள சொத்து)

கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு வருமதியான கொடுப்பனவை செலுத்த தவறியுள்ளனர். ஆதலால் இப்பொழுது மேற்படி முறியின்மீது ரூபா ஒரு கோடியே தொண்ணூற்றைந்து இலட்சத்து ஆயிரத்து தொளாயிரத்து முப்பதாறு ரூபா பதினொரு சதம் (ரூ. 19,501,936.11) பணத்தொகை 2018.11.26 ஆந் திகதியன்று உள்ளவாறு கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் P. L. C. இற்கு வருமதியாகவும் சேரவேண்டியும் உள்ளதாலும் மேற்படி ஒரு கோடியே தொண்ணூற்றைந்து இலட்சத்து ஆயிரத்து தொளாயிரத்து முப்பத்தாறு ரூபா பதினொரு சதம் ( ரூபா 1,95,01,936.11) பணத்தொகையும் அத்துடன் 2018.11.27 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை காலத்துக்கான ரூபா 18,000,000 பணத்தொகைக்கு 15.5% வருடாந்த வட்டியும் விளம்பரச் செலவுகளையும் கூறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விபரிக்கப்படுபவையும் 13043 மற்றும் 13198 ஆம் இலக்க முறிகளினால் மற்றும் உரித்துச் சான்றிதழினால் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்டவையுமான இதன் கீழ் 1 ஆம் மற்றும் 2 ஆம் அட்டவணையில் மேலும் விபரிக்கப்பட்டுள்ள ஆதனமும் வளவுகளும் கண்டி, மாவில்மட, லேவெல்ல ரோட், துட்டுகெமுனு மாவத்தையில் இல. 369/ 1 ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.".

### முதலாம் ஆதனத்தின் அட்டவணை

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், வகபனஹ பல்லேசிய பத்து மாத்தளை வடக்கு பிரிவில் தம்புள்ளை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் தம்புள்ளை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட லெனதொர வடக்கு கிராம அலுவலர் பிரிவில் லெனதொர கிராமத்தில் அமைந்துள்ள "ஹகிரில்ல மற்றும் மெதயாய" எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஏ. ஜே. பண்டார என்பவரால் 2013.08.10 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட 5533 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 3 எனும் பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டு அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மற்றைய மேம்படுத்தல்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இதன் எல்லைகள் - வடக்கு : D. A. தம்மிக என்பவர் உரிமம் கோரும் காணி ; கிழக்கு : மாத்தளையிலிருந்து தம்புள்ளைக்கு செல்லும் பாதை ; தெற்கு : ஆரோன் சிஞ்ஞோ என்பவர் உரிமம் கோரும் காணியும் ஒற்றையடிப் பாதையும் மற்றும் ; மேற்கு : உபாலி குலவங்ஷ என்பவர் உரிமம் கோரும் காணி. இது ஒரு ஏக்கர் ஒரு றூட் (01ஏ. 01றூ. 00பே.) பரப்பளவானதாகும். இது மாத்தளை காணிப் பதிவகத்தில் இல. L19/117 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### இரண்டாம் ஆதனத்தின் அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம் மற்றும் கம்பஹா பதிவுப் பிரிவு மற்றும் மாவட்டத்தில், அலுத்குரு கோரளை துனகஹபத்து திவுலபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் திவுலபிட்டிய பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இல. 87A ஹப்புவலான கிராம அலுவலர் பிரிவில் மாப்பலன்கெதர கிராமத்தில் அமைந்துள்ள வரைபட இல. 510013 இல் குறிக்கப்பட்ட 1:120 எனும் காணித்துண்டின் எல்லைகள் - வடக்கு : 510013 ஆம் இலக்க கெடஸ்டர் வரைபடத்தில் குறிக்கப்பட்ட காணித்துண்டுகள் 1:106, 1:103 மற்றும் 1:121 ; கிழக்கு : 510013 ஆம் இலக்க கெடஸ்டர் வரைபடத்தில் குறிக்கப்பட்ட காணித்துண்டுகள் 1: 103 மற்றும் 1 : 121 ; தெற்கு : 510013 ஆம் இலக்க கெடஸ்டர் வரைபடத்தில் குறிக்கப்பட்ட காணித்துண்டு 1:136 மற்றும் ; மேற்கு : 510013 ஆம் இலக்க கெடஸ்டர் வரைபடத்தில் குறிக்கப்பட்ட காணித்துண்டு 1 : 180 எனும் இவ்வெல்லைகளுக்குள் அமைந்துள்ள பூச்சியம் தசம் ஒன்று ஒன்று ஒன்று ஏழு ஹெக்டயார் (0.1117 ஹெக்டயார்) பரப்பளவான காணி, இது நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் உரித்துச் சான்றிதழில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### மேற்கூறிய காணி அண்மையில் செய்யப்பட்ட அளவையின் பிரகாரம் கீழ்க்கண்டவாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணம், கம்பஹா பதிவுப் பிரிவு மற்றும் கம்பஹா மாவட்டத்தில், அலுத்குரு கோரளை துனகஹபத்து திவுலபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் திவுலபிட்டிய பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இல. 87A ஹப்புவலான கிராம அலுவலர் பிரிவில் மாப்பலன்கெதர கிராமத்தில் அமைந்துள்ள காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ. எம். ஜயபால என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2016.11.22 ஆந் திகதிய 1825 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட 1:120 எனும் காணித்துண்டின் எல்லைகள் : வடக்கு : 510013 ஆம் இலக்க கெடஸ்டர் வரைபடத்தில் 1 ஆம் பிரிவில் குறிக்கப்பட்ட காணித்துண்டுகள் 1:106, 1:103 மற்றும் 1:121 ; கிழக்கு : 510013 ஆம் இலக்க கெடஸ்டர் வரைபடத்தில் 1 ஆம் பிரிவில் குறிக்கப்பட்ட காணித்துண்டுகள் 1:103 மற்றும் 1:121; தெற்கு : 510013 ஆம் இலக்க கெடஸ்டர் வரைபடத்தில் 1 ஆம் பிரிவில் குறிக்கப்பட்ட காணித்துண்டு 1:136 மற்றும் மேற்கு : 510013 ஆம் இலக்க கெடஸ்டர் வரைபடத்தில் 1 ஆம் பிரிவில் குறிக்கப்பட்ட காணித்துண்டு 1 : 180 எனும் இவ்வெல்லைகளுக்குள் அமைந்துள்ள பூச்சியம் தசம் ஒன்று ஒன்று ஒன்று ஏழு ஹெக்டயார் (0.1117 ஹெக்டயார்) பரப்பளவான காணி, இது நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் உரித்துச் சான்றிதழில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரமித் ராஜபக்ஷ,
கம்பனிச் செயலாளர்.

10-429

---

## கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீ

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீயினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின்படி பின்வரும் தீர்மானமானது (இதனகத்துப் பின்னர் யூனியன் வங்கி எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால், 2019, ஓகத்து 28 ஆந் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தின்போது பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் (இதனகத்துப் பின்னர் "கடப்பாடுடையவர் எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) இல. 1734, லியனகம, எம்பிலிபிட்டிய எனும் முகவரியிலும் மற்றும் இல. 83, லியனகம, எம்பிலிபிட்டியவுக்கு முன்னாலும் உள்ள வன்னி ஆரச்சி கங்கானம்கே அதுல பிரசன்ன (தேசிய அடையாள அட்டை இல. 793031815V கொண்ட) என்பவர் (இதனகத்துப்பின்னர் யூனியன் வங்கி என அழைக்கப்படுகின்ற) PB676PQ கம்பனிப் பதிவிலக்கத்தையுடைய கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீ வங்கியிலிருந்து நிதி வசதிகளைப் பெற்றுக் கொண்டிருப்பதாலும், அத்தோடு சொல்லப்பட்ட கடப்பாடு டையவர் சொல்லப்பட்ட நிதி வசதிகளின் காரணமாக சொல்லப்பட்ட யூனியன் வங்கிக்கு செலுத்த வேண்டிய ரூபா 10,000,000.00 தொகை மற்றும் ரூபா 2,901,000.00 தொகை என்பவற்றுக்காக, பிரசித்த நொத்தாரிசு என். ஆர். பண்டார அவர்களால் முறையே அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.12.13 ஆந் திகதியுடைய 3923 ஆம் இலக்க ஆரம்ப ஈட்டுமுறியையும் மற்றும் 2018.12.27 ஆந் திகதியுடைய

4503 ஆம் இலக்க இரண்டாந்தர ஈட்டு முறியையும் நிறைவேற்றி யூனியன் வங்கிக்கு வருமதியான சொல்லப்பட்ட நிதிவசதிகள் மற்றும் அவற்றின் மீதான வட்டிக்கு பிணைப்பொறுப்பாக இதன் அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்ட ஆதனத்தை ஈடுவைத்து அடமானம் செய்திருக்கின்றார்.

அத்தோடு 2019.05.29 ஆந் திகதியில் உள்ளவாறு, ஒரு கோடியே முப்பது இலட்சத்து எழுபத்தேழாயிரத்து பதினெட்டு ரூபா அறுபத்தொரு சதம் (ரூபா 1,30,77,018.61) தொகை மற்றும் சொல்லப்பட்ட நிதிவசதிகளின் மூலதன நிலுவை மீது மேலதிக வட்டியும் பின்வருமாறு யூனியன் வங்கிக்கு சொல்லப்பட்ட கடப்பாடுடையவரிடமிருந்து வருமதியாகவும் மற்றும் சேர வேண்டியதாகவும் உள்ளது:

(i) 2019.05.29 ஆந் திகதியில் உள்ளவாறு 0444001000053345 ஆம் இலக்க கடன் வசதி மீது மொத்த நிலுவையாக இருக்கின்ற தொண்ணூற்று ஒன்பது இலட்சத்து எழுபத்திரண்டாயிரத்து ஐந்நூற்று எண்பத்தெட்டு ரூபா நாற்பது சதம் (ரூபா 99,72,588.40) தொகையுடன் சேர்த்து மூலதன நிலுவையாக இருக்கின்ற தொண்ணூற்று மூன்று இலட்சத்து அறுபத்தொன்பதாயிரம் (ரூபா 93,69,000.00) தொகை மீது 2019.05.30 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை வருடத்துக்கு 19.75% சதவீத வட்டியும்;

(ii) 2019.05.29 ஆந் திகதியில் உள்ளவாறு தவணைக் கடன் வசதி இல. 0444001000053354 மீது மொத்த நிலுவையாக இருக்கின்ற முப்பத்தொரு இலட்சத்து நான்காயிரத்து நாநூற்று முப்பது ரூபா இருபத்தொரு சதம் (ரூபா 31,04,430.21) தொகை மற்றும் மூலதன நிலுவையாக இருக்கின்ற இருபத்தொன்பது இலட்சத்து ஆயிரம் (29,01,000.00) தொகை மீது 2019.05.30 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை வருடத்துக்கு 21% சதவீத வட்டியும்.

யூனியன் வங்கிப் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ், சொல்லப்பட்ட பணிப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் செயல்படுவதனாலும், சொல்லப்பட்ட கடப்பாடுடையவர் மேற்குறித்த தவணைக் கடன் நிலுவைகளை அல்லது அவற்றின் பகுதிகளை கொடுத்துத் தீர்ப்பதில் தவணை தவறியுள்ளார் எனத் திருப்திப்பட்டுள்ளதனாலும், சொல்லப்பட்ட நிதிவசதிகள் மீது யூனியன் வங்கிக்கு சொல்லப்பட்ட கடப்பாடுடையவரிடமிருந்து வருமதியானதும் மற்றும் சேர வேண்டியதுமான மொத்த நிலுவைத் தொகையாகிய இலங்கை ரூபா ஒரு கோடியே முப்பது இலட்சத்து எழுபத்தேழாயிரத்து பதினெட்டு ரூபா அறுபத்தொரு சதம் (ரூ. 1,30,77,018.61) தொகையையும், 2019.05.30 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை சொல்லப்பட்ட தவணைக் கடன் வசதியின் மீது மேலே சொல்லப்பட்ட வீதங்களில் மேலதிக வட்டியையும், சொல்லப்பட்ட 3923 ஆம் இலக்க ஆரம்ப ஈட்டு முறி மற்றும் 4503 ஆம் இலக்க இரண்டாந்தர ஈட்டுமுறி மற்றும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மேற்குறித்த சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரமும் யூனியன் வங்கிக்கு மீட்டுக் கொள்வதற்கு உரித்துடைய அனைத்து ஏனைய தொகைளையும் மீட்டுக்கொள்வதற்காக, சொல்லப்பட்ட 3923 ஆம் இலக்க ஆரம்ப ஈட்டு முறி மற்றும் 4503 ஆம் இலக்க இரண்டாந்தர ஈட்டுமுறி என்பவற்றின் கீழ் மற்றும் அவற்றின் பயனால் யூனியன் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட ஆதனத்தை சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் நியதிகளினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கு உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளராகிய எல். பீ. சேனாநாயக்க ஒக்ஷனியர்ஸ் நிறுவனத்திற்கு 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மேற்குறித்த சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் அதிகாரமளிப்பதற்கு இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.".

## அட்டவணை

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டத்தில் கொலன்ன கோரளை தியபொடுகம் பற்று எம்பிலிபிடிய மாநகர சபை மற்றும் எம்பிலிபிடிய பிரதேச செயலகப் பிரிவு எல்லைகளக்குள் இல. 214H யோதகம கிராம அலுவலர் பிரிவில் எம்பிலிபிடிய, உடகம கிராமத்தில் அமைந்துள்ள வீரஹின்கே பங்குவ (மோதரவன ஹேனயாயவின் பாகம்) என அழைக்கப்படுகின்ற காணியிலிருந்து உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பீ. பி. இலங்கசிங்க அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 2008.06.25 ஆந் திகதியுடைய 1088 ஆம் இலக்க நில அளவை வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு துண்டம் A என அடையாளமிடப்பட்டுள்ள அத்தகைய காணிக்கு எல்லைகள் பின்வருமாறு- வடக்கு : வீடுகளிலிருந்து பிரதான வீதிக்கு செல்கின்ற வீதி மற்றும் பாதை; கிழக்கு : அதே காணியின் எஞ்சிய பாகம்; தெற்கு : அதே காணியின் எஞ்சிய பாகம், மற்றும்; மேற்கு : வீடுகளிலிருந்து பிரதான வீதிக்கு செல்கின்ற வீதி மற்றும் பாதை ஆகிய எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணி முப்பத்தைந்து தசம் நான்கு பேர்ச்சர்கள் (00ஏ. 00று. 35.4பே.) விஸ்தீரணத்தைக் கொண்டு அதனகத்தே உள்ள கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதையும் உள்ளடக்கி 1088 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்ட பிரதான வீதிக்கு செல்கின்ற பாதைக்கு மேல் மற்றும் அதன் வழியே உள்ள பாதை உரித்துக்கும் உட்பட்டு எம்பிலிபிட்டிய காணிப் பதிவகத்தில் L 28/114 பிரிவு/இருமடி இலக்கத்தின் கீழ் பதிவு செய்யபபட்டு தற்போது L 175/62 பிரிவு/இருமடி இலக்கத்துக்கு முன் கொண்டு வரப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இனோகா ஜயவர்தன,
பணிப்பாளர் சபைச் செயலாளர்.

10-441

## சனச டிவலொப்மன்ட் பேங்க் பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சனச டிவலொப்மன்ட் பேங்க் பீஎல்சீ (பதிவு இல. PB62PQ) பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

கடன் கணக்கு இல. : 2392928
கிளை : புத்தல

சாமசுந்தர முதியன்சேலாகே ஜனித மதுரங்க

23.08.2019 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டமொன்றில் சனச டிவலொப்மன்ட் பேங்க் பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றிய தீர்மானமானது :-

கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஜீ. ஏ. ஐ. யு. கே. அபேகுணவர்தன என்பவரால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 22.03.2019 ஆந் திகதிய 224 ஆம் இலக்க முறியின் மீது சனச டிவலொப்மன்ட் பேங்க் பீஎல்சீ இற்கு சாமசுந்தர முதியன்சேலாகே ஜனித மதுரங்க என்பவர் கடப்பாடுடையவராக சனச டிவலொப்மன்ட் பேங்க் பீஎல்சீ இற்கு வருமதியான கொடுப்பனவை செலுத்த தவறியுள்ளார்கள். ஆதலால் இப்பொழுது மேற்படி முறியின் மீது முப்பத்தொரு மில்லியன் முந்நூற்று எண்பத்தெட்டாயிரத்து தொளாயிரத்து பதின்மூன்றும் ரூபா தொண்ணூற்று ஆறு சதம் (ரூபா 31,388,913.96) பணத்தொகை 24.06.2019 ஆந் திகதியன்று உள்ளவாறு சனச டிவலொப்மன்ட் பேங்க் பீஎல்சீ இற்கு வருமதியாக சேரவேண்டியும் உள்ளதாலும் மேற்படி முப்பத்தொரு மில்லியன் முந்நூற்று எண்பத்தெட்டாயிரத்து தொளாயிரத்து பதின்மூன்றும் ரூபா தொண்ணூற்று ஆறு சதம் (ரூ. 31,388,913.96) பணத்தொகையும் அத்துடன் 25.06.2019 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள் வரை காலத்துக்கான வட்டியும் விளம்பரச் செலவுகளையும் கூறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விபரிக்கப்படுபவையும் 224 ஆம் இலக்க முறியினால் மேற்படி சனச டிவலொப்மன்ட் பேங்க் பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்டவையுமான ஆதனமும் வளவுகளும் கண்டி, மாவில்மட, லேலெல்ல ரோட், துட்டுகெமுனு மாவத்தையில், இல. 369/ 1, ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யு. ஜயசூரிய என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென சனச டிவலொப்மன்ட் பேங்க் பீஎல்சீ இற்கு பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.''

### ஆதனத்தின் அட்டவணை

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், தியபொட்ட கம்பத்து கொலொன்ன கோரளை, எம்பிலிபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் எம்பிலிபிட்டிய நகர சபை எல்லைகளுக்குட்பட்ட உடகம கிராம அலுவலர் பிரிவில் உடகம கிராமத்தில் அமைந்துள்ள மோதரவான ஹேன்யாய எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். இராமகிருஷ்ணன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 13.08.2010 ஆந் திகதிய 3513/A /10 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 01 எனும் காணித்துண்டுகளின் எல்லைகள் - வடக்கு : பாதை; கிழக்கு : வை. எம். டிக்கிரி பண்டா, ரீ. பந்துரத்ன மற்றும் ஏ. வீ. ரஹில்கா ஆகியோர்களால் உரிமம் கோரப்படும் காணி; தெற்கு : சீ. எச். டீ. நிஹால் மற்றும் பர்ட்டி பீ. பரனஹேவா ஆகியோர்களால் உரிமம் கோரப்படும் காணி மற்றும் ; மேற்கு: பாதை எனும் இவ்வெல்லைகளுக்குள் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள் பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது ஒரு ஏக்கர் இரண்டு றூட் (01ஏ.02றூ. 00பே.) பரப்பளவானது. லொட் 01 எனும் காணித்துண்டிக்கு சகல பாதைகளையும் உபயோகிக்கும் உரிமையும் உட்படும். இது எம்பிலிபிட்டிய காணிப் பதிவகத்தில் இல. L140/106 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

சபையின் கட்டளைப்படி,

சபைச் செயலாளர்.

10-434

---

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி

(காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்பட்ட) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்ான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்.

கடன் இலக்கம் :- 702501000134 மற்றும் 702725000096

கடனாளியின் முழுப் பெயர் : தானியெல் ஆரச்சிகே உபாலி ஹரிஸ்சந்ர

பொலன்னறுவையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எல். எச். லலித் மர்வின் த சில்வா என்பவரினால் 2017.10.12 ஆந் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட 2992 ஆம் இலக்கத்தினை கொண்ட அடகுப் பத்திரம் மற்றும் மேற்படி அதே நொத்தாரிசினால் 2018.02.09 ஆந் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட 3087 ஆம் இலக்கத்தினை கொண்ட அடகுப் பத்திரங்களின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம். இங்கு இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனாளியினால், அடகு வைக்கப்பட்டதன் பின்பு பெற்றுக் கொண்ட கடனை வங்கிக்கு மீளச்செலுத்த தவறியுள்ளதனால்,

மேற்குறிப்பிட்ட அடகுப் பத்திரங்களின்படி, ஐம்பத்து இரண்டு இலட்சத்து ஏழாயிரத்து இருநூற்று நாற்பத்து நான்கு ரூபா எண்பத்து எட்டு சதம் (ரூபா 5,207,244.88) 2019.08.31 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்,

(1) முதலாவது கடன் தொகைக்காக 702501000134

குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான இருபத்து ஒரு இலட்சத்து எண்பத்து ஆறாயிரத்து எண்ணூற்று பதின் மூன்று ரூபா ஐம்பது சதத்தினையும் (ரூபா 2,186,813.50) 2019.08.31 ஆம் திகதி வரை நிலுவையாகவுள்ள ஏழு இலட்சத்து எழுபத்து ஒன்பதாயிரத்து நூற்று ஐம்பத்து எட்டு ரூபா நான்கு சதத்தினையும் (ரூபா 7,79,158.04) இதன்படி முழுத் தொகையான இருபத்து ஒன்பது இலட்சத்து அறுபத்து ஐயாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து ஒரு ரூபா ஐம்பத்து நான்கு சதத்தினையும் (ரூபா 29,65,971.54)

இரண்டாவது கடன் தொகைக்காக 702725000096

குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான பதினைந்து இலட்சத்து அறுபத்து ஒன்பதாயிரத்து எழுநூற்று மூன்று மூபா எழுபத்து ஆறு சதத்தினையும் (ரூபா 15,69,703.76) 2019.08.31 ஆம் திகதி வரை நிலுவையாகவுள்ள ஆறு இலட்சத்து எழுபத்து ஓராயிரத்து ஐநூற்று அறுபத்து ஒன்பது ரூபா ஐம்பத்து எட்டு சதத்தினையும் (ரூபா 6,71,569.58) இதன்படி முழுத் தொகையான இருபத்து இரண்டு இலட்சத்து நாற்பத்து ஓராயிரத்து இருநூற்று எழுபத்து மூன்று ரூபா முப்பத்து நான்கு சதத்தினையும் (ரூபா 22,41,273.34) இதன்படி கடன்களின் மொத்த தொகையான ஐம்பத்து இரண்டு இலட்சத்து ஏழாயிரத்து இருநூற்று நாற்பத்து நான்கு ரூபா எண்பத்து எட்டு சதத்தினையும் (ரூபா 52,07,244.88)

(2) குறிப்பிட்ட முதலாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான இருபத்து ஒரு இலட்சத்து எண்பத்து ஆறாயிரத்து எண்ணூற்று பதின் மூன்று ரூபா ஐம்பது சதத்திற்காக (ரூபா 21,86,813.50) அறவிட வேண்டிய 17.50% வீத வருடாந்த வட்டியினையும், இரண்டாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான பதினைந்து இலட்சத்து அறுபத்து ஒன்பதாயிரத்து எழுநூற்று மூன்று ரூபா எழுபத்து ஆறு சதத்திற்காக (ரூபா 15,69,703.76) அறவிட வேண்டிய 17.50% வீத வருடாந்த வட்டியினையும், 2019.09.01 ஆம் திகதியிலுந்து ஆதனம் பகிரங்க ஏளத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) அறவீடு செய்து கொள்வதற்காகவும்,

(3) 2019.09.01 ஆம் திகதி தொடக்கம் ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) மேற்கூறப்பட்ட மொத்த நிலுவைத் தொகையான பதின் நான்கு இலட்சத்து இருபத்து எட்டாயிரத்து முந்நூற்று இருபத்து ஏழு ரூபா முப்பத்து இரண்டு சதத்திற்காக (ரூபா 14,28,327.32) மாதாந்தம் 2% வீத தாமத வட்டி ஒன்றினை அறவீடு செய்வதற்காவும்,

(4) 1990 ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை,

அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றை கழித்த பின்னர்) மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என, 2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி,இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது."

## அட்டவணை

வடமத்திய மாகாணத்தில், பொலன்னறுவை மாவட்டத்தில், மெத பத்துவவில் தமன்கடுவ பிரதேச சபை எல்லையில் மற்றும் தமன்கடுவ பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட இலக்கம் 199 – ஸ்ரீ நிஸ்ஸங்கமல்லபுர கிராம அலுவலர் பிரிவில் நிஸ்ஸ ங்கமல்லபுர கிராமத்தில் அமைந்துள்ள நிஸ்ஸங்கமல்லபுர என்ற காணிக்கு 2016.10.08 ஆம் திகதி, அனுமதிபெற்ற நில அளவையாளர் டப்ளியூ. டப்ளியூ. எல். எல். காமினி என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 2369 என்ற இலக்க காணிவரைபடத்தின்படி 02 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக வடக்கே : குடியிருப்பு உத்தியோகத்தரின் துண்டு பிரித்தல் வரைபடத்தின்படி 231ஆம் மற்றும் 230ஆம் இலக்க காணித்துண்டுகளும்; கிழக்கு : பிரதேச சபை பாதையும்; தெற்கு: பிரதேச சபை பாதையும் மற்றும் குறிப்பிட்ட 2369 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி 01 ஆம் இலக்க காணித்துண்டும்; மேற்கு : குறிப்பிட்ட 2369 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி 01 ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இக்காணித்துண்டின் விஸ்தீரணம் ஒரு றூட் மூன்று சதம் ஐந்து பூச்சியம் பேர்ச் ஆகும். (0ஏ. 01றூ, 3.50பே.) அல்லது பூச்சியம் தசம் ஒன்று ஒன்று பூச்சியம் பூச்சியம் ஹெக்டார்களாகும். (ஹெக் 0.1100) இக்காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள் தாவரங்கள் பழவகைகள் மற்றும் அனைத்தும் பொலன்னறுவை காணிப் பதிவுக் காரியாலயத்தில் இலக்கம் LDO/B/35/174 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலக்கம் 314 (பொ/தம/பி/2134) என்ற அளிப்புப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள (464 ஆம் அத்தியாயம்) காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் இந்த காணி

பாதுகாப்பு ஷரத்து மற்றும் நிபந்தனைகளின் கீழ் வங்கிக்கு அடகு வைப்பதற்காக தமன்கடுவ உதவி பிரதேச செயலாளரின் முன் அனுமதியுடன் அவரது இலக்கம் එන්සීපී/ටීකේ/9/3/1/199/2/245 என்ற இலக்கத்தினையுடைய 2017.08.16 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

**இரண்டாவது அட்டவணை**

**பாதுகாப்பு ஷரத்துக்கள்**

1. காணியில் அல்லது அதனகத்தே காணப்படும் அனைத்து கனிய வளங்களின் (இந்தப் பதத்தின் மூலம் இங்குள்ள பெறுமதிமிக்க மாணிக்க கற்களும் உள்ளடக்கப்படும்.) உரிமை மற்றும் அகழ்வு, தேடுதல், நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் மற்றும் அவ்வாறான கனிய வளங்களை வெளியில் எடுத்துச் செல்வதற்குமான உரிமை அரசிடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2. காணிக்கான உரித்து தொடர்பில் காணியின் உரிமையாளர் என்றவகையில் காணப்படும் உரிமையானது இந்த அளிப்பு இடம்பெறும் திகதியில் காணி மீது காணப்படும் பாதைக்கான உரிமையுடன் காணி மீதுள்ள ஏனைய உரிமைகளுக்கும் உட்பட்டதாகவே இருக்கும்.

**நிபந்தனைகள்**

1. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள குறைந்த உப பிரிவுகளாக பிரிக்கப்படும் அலகுகள், அதாவது உயர் நிலங்கள் 1/4 ஏக்கர் அல்லது .......... ஹெக்டயர் நீர்ப்பாசன வசதியுள்ள காணிகள் .......... னை விட அளவில் குறைந்ததாக காணப்படும் காணியின் பிரிக்கப்பட்ட ஒரு துண்டினை/உரிமையாளரினால் வெலியேற்ற முடியாது.

2. இங்கு குறிப்பிடப்பட்ட குறைந்த அளவினை விட, அதாவது 1/6 அளவினை விட குறைவாக குறிப்பிட்ட காணி துண்டாடப்பட்டு உரிமையாளரினால் பிறருக்கு வழங்க முடியாது.

3. எந்த ஒருவரும் 1 ஆவது நிபந்தனையில் குறிப்பிடப்பட்ட குறைந்த அளவுக்கு குறைவான பரப்பளவு கொண்ட காணியின் பிரிக்கப்பட்ட ஒரு காணித்துண்டின் உரிமை யாளராக இருக்க முடியாது.

4. எந்த ஒருவரும் 2 ஆவது நிபந்தனையில் குறிப்பிடப்பட்ட குறைந்த அளவுக்கு குறைவான பரப்பளவு கொண்ட காணியின் பிரிக்கப்பட்ட ஒரு காணித்துண்டின் உரிமையாளராக இருக்க முடியாது.

5. காணிக்கு அல்லது அதன் ஏதேனும் ஒரு துண்டுக்கு நீர் வழங்க முடியுமாயின், அல்லது ஏற்கனவே நிர்மாணிக் கப்பட்டுள்ள ஏதேனும் நீர்ப்பாசன நடவடிக்கைக்கான நிர்மாணப்பணி அல்லது நிர்மாணிக்கப்படவுள்ள ஒருவிடயம் காரணமாக நீரினை வழங்க முடியுமாயின் அல்லது அந்த நீர் வழங்கலை மேற்கொள்ள சாத்தியமான பிரதேசம் சம்பந்தமாக உரிமையாளர் (453 ஆவது அத்தியாயம்) நீர்ப்பாசன கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கும் ஏற்ப செயற்படவேண்டும்.

6. அரசாங்க அதிபதிடமிருந்து எழுத்து மூலமான அனுமதியுடன் சம்பந்தப்பட்ட அதிகாரியிடமிருந்து உரிமம் பெறாது அந்தகாணியின் மீது அல்லது அதன் அகத்தே காணப்படும் எந்த இரு கனியவளங்களையும் அகழ்தல், தேடுதல் அல்லது உபயோகித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவது அல்லது வேறு வகைகளில் வெளியேற்றுவது உரிமையாளரினால் தவிர்க்கப்பட வேண்டும்.

7. பிரதேச செயலாளரின் முன் அனுமதியினை எழுத்து மூலமாக பெற்றுக் கொள்ளாது காணியினையோ அல்லது அதில் உள்ள எந்த ஒரு பகுதியினையோ விற்பனை செய்யக்கூடாது.

பொலன்னறுவையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிஸ் எல். எச். லலித் மர்வின் த சில்வா என்பவரினால் 2017.10.12 ஆம் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட 2992 ஆம் இலக்கத்தினை கொண்ட அடகுப் பத்திரம் மற்றும் மேற்படி அதே நொத்தாரிசினால் 2018.02.09 ஆம் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட 3087 ஆம் இலக்கத்தினை கொண்ட அடகுப் பத்திரங்களின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் பரீட்சிக்கப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

இலங்கை வீடமைப்பு அபிவித்தி
நிதிக்கூட்டுத்தாபன வங்கி,
சேர். சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை,
த. பெ. இல. 2085,
கொழும்பு 02,
2019, செத்தெம்பர் 26.

10-494

---

LE/RE/201

**இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி**

(காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்பட்ட) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்ான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்.

கடன் இலக்கம் :- 60373 0000001
கடனாளியின் முழுப் பெயர் : கித்தல ஹிட்டியாவே சோமரத்னகே மது நெத்மி மற்றும் ஹெட்டி ஆரச்சிலாகே லசந்த தினேஸ் சமரசிங்ஹ அல்லது ஹெட்டி ஆரச்சிகே லசந்த தினேஸ் சமரசிங்ஹ.

குருநாகலையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிஸ் டி. திலக்சேன என்பவரினால் எழுதி உறுதி செய்யப்பட்ட 922 ஆம் இலக்கத்தினையும் 2018.04.12 ஆம் திகதியையும்

கொண்ட அடகுப் பத்திரம் மற்றும் குறிப்பிட்ட அடகுப் பத்திரத்தின் மீது கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிஸ் டபிள்யூ. டபிள்யூ. டி. எஸ். சீ. பெரேரா என்பவரினால் எழுதி உறுதி செய்யப்பட்ட 2061 ஆம் இலக்கத்தினையும் 2019.02.11 ஆம் திகதியையும் கொண்ட காணித் துண்டுகளை விடுவிக்கும் உறுதிப்பத்திரத்தின்படி இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம், இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனாளிகளினால் அடகு வைக்கப்பட்டதன் பின்பு பெற்றுக் கொண்ட கடனை வங்கிக்கு மீளச்செலுத்த தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடகுப் பத்திரம் மற்றும் காணித் துண்டுகளை விடுவிக்கும் உறுதிப்பத்திரத்தின்படி, தொண்ணூறு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து தொளாயிரத்து பதினாறு ரூபா முப்பத்து இரண்டு சதம் (ரூபா 90,34,916.32) 2019.08.31 ஆம் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்.

(1) குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான எழுபத்து ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து இருநூற்று அறுபத்து இரண்டு ரூபா எழுபத்து ஏழு சதத்தினையும் (ரூபா 7,993,262.77) 2019.08.31 ஆம் திகதி வரையிலான நிலுவைத் தொகையான பத்து இலட்சத்து நாற்பத்து ஓராயிரத்து அறுநூற்று ஐம்பத்து மூன்று ரூபா ஐம்பத்து ஐந்து சதத்தினையும் (ரூபா 10,41,653.55) இதன்படி மொத்தமாக தொண்ணூறு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து தொளாயிரத்து பதினாறு ரூபா முப்பத்து இரண்டு சதத்தினையும் (ரூபா 90,34,916.32)

(2) குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத எழுபத்து ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து இருநூற்று அறுபத்து இரண்டு ரூபா எழுபத்து ஏழு சதத்திற்காக (ரூபா 7,993,262.77) அறவீடு செய்ய வேண்டிய 17.00% வீத மான வருடாந்த வட்டியினையும் 2019.09.01 ஆம் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதிவரைக்கும் (அந்த இரு தினங்களும் அடங்களாக) அறவீடு செய்து கொள்வதற்காகவும்.

(3) 2019.09.01 ஆம் திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதிவரை (அந்த இரு தினங்களும் அடங்களாக) மேற்குறிப்பிட்ட மொத்த நிலுவைத் தொகையான பத்து இலட்சத்து முப்பத்து இரண்டாயிரத்து நூற்று ஐம்பத்து மூன்று ரூபா ஐம்பத்து ஐந்து சதத்திற்காக (ரூபா 10,32,153.55) மாதாந்தம் 2.00% தாமத வட்டி ஒன்றினை அறவீடு செய்வதற்காகவும்,

(4) 1990 ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை,

அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றை கழித்த பின்னர்) மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரம் மற்றும் காணித்துண்டுகளை விடுவிக்கும் உறுதிப் பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என, 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.''

**அட்டவணை**

வடமேல் மாகாணத்தில், குருநாகலை மாவட்டத்தில், வேவுடவில்லி ஹத்பத்துவவில், திரகன்தஹய கோரளையில், குருநாகலை பிரதேச சபை எல்லையில் மற்றும் மல்லவபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவுக்கு உப்பட்ட, இலக்கம் 733 - கொலபெலலிகந்த கிராம அலுவலர் பிரிவில், தெலியாகொன்ன கிராமத்தில் அமைந்துள்ள கந்தஅஹபொடவத்த அல்லது கந்துபொடவத்த என்ற காணிக்கு 2018.10.03 ஆம் திகதி அனுமதிபெற்ற நில அளவையாளர் பி. பி. திசானாயக்க என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 8740 ஆம் இலக்க காணிவரைபடத்திபடி 02 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக வடக்கு : அனுமதிபெற்ற நில அளவையாளர் டப்ளியூ. சீ. எஸ். எம். அபேசேகர என்பவரினால் 1982.10.09 ஆம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 157/82 ஆம் இலக்க காணி வரபடத்தின்படி 02 ஆம் இலக்க காணித்துண்டும் மற்றும் அனுமதிபெற்ற நில அளவையாளர் ஜீ. ஏ. த. சில்வா என்பவரினால் 1955.06.25 ஆம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 6436 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி 45ஆம் இலக்கக் காணித்துண்டும், கிழக்கு : 157/82 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 02 ஆம் இலக்க காணித்துண்டும் அதே காணிவரைபடத்தின்படி 03 ஆம் இலக்க காணித்துண்டு, தெற்கு : 4895 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 03ஆம் இலக்க காணித்துண்டும் அதே காணி வரைபடத்தின்படி 01 ஆம் இலக்க காணித்துண்டும்,

மேற்கு : அதே காணி வரைபடத்தின்படி 01 ஆம் இலக்க காணித்துண்டும் வீடுகளிலிருந்து கண்டிப் பாதை வரை செல்லும் பிரதேச சபை பாதையும் எல்லைகளாக அமைந்து காணப்படுகின்றன. இக்காணித்துண்டின் விஸ்தீரணம் முப்பத்து ஏழு தசம் ஏழு பூச்சியம் பேச்சஸ்களாகும் (0ஏ. 0றூ. 37.70பே.) அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் ஒன்பது ஐந்து நான்கு (0.0954) ஹெக்டயர்களாகும். இக்காணிதுண்டும் இதில் உள்ள கட்டிடங்கள், தாவரங்கள், பழவகைகள் மற்றும் அனைத்துடனும்.

மேற்குறிப்பிட்ட 02 ஆம் இலக்க காணித்துண்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள காணியின் உப பிரிவாகும்.

மேற்குறிப்பிட்ட எல்லையினுள் இலக்கம் 733 - கொலபெலலி கந்த கிராம அலுவலர் பிரிவில், தெலியாகொன்ன கிராமத்தில் அமைந்துள்ள கந்த-அஹபொடவத்த அல்லது கந்துபொடவத்த என்ற காணிக்கு 2007.08.04 ஆந் திகதி பீ. பீ. திசானாயக்க என்ற அனுமதிபெற்ற நில அளவையாளரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 4895 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 01 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக வடகிழக்கு : கண்டிப் பாதையை நோக்கிச் செல்லும் பாதையும் தென்கிழக்கு: 4895 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி 03 ஆம் இலக்க காணித்துண்டும் (12 அடி அகலப் பாதை) மற்றும் 4895 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி 02 ஆம் இலக்க காணித்துண்டும்; தென்மேற்கு : 6436 ஆம் இலக்காணிவரைபடத்தின்படி 59ஆம் இலக்க காணித்துண்டும் (கண்டியை நோக்கி செல்லும் பாதை); வடமேற்கு : அனுமதிபெற்ற நிள அளவையாளர் ஜி. ஏ. த சில்வா அவர்களினால் 1955.06.25 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 6436 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 45 ஆம் இலக்க காணித்துண்டும் 157/82 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 02 ஆம் இலக்க காணித்துண்டும் எல்லைகளாக அமைந்து காணப்படுகின்றன. இக்காணித்துண்டின் விஸ்தீரணம் இரண்டு றூட் ஐந்து பேச்சஸ்களாகும். (0ஏ. 2றூ. 5.00பே.) மற்றும் பூச்சியம் தசம் இரண்டு ஒன்று ஐந்து பூச்சியம் (0.2150) ஹெக்டயர்களாகும். இக்காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள், தாவரங்கள், பழவகைகள் மற்றும் ஏனைய அனைத்துடனும். குருநாகலை காணிப்பதிவு காரியாலத்தில் J 153/55 என்ற தலைப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குருநாகலையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டி. திலக்சேன என்பவரினால் எழுதி உறுதி செய்யப்பட்ட 922 ஆம் இலக்கத்தினையும் 2018.04.12 ஆந் திகதியையும் கொண்ட அடகுப் பத்திரம் மற்றும் குறிப்பிட்ட அடகுப் பத்திரத்தின் மீது கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. டபிள்யூ. டி. எஸ். சீ. பெரேரா என்பவரினால் எழுதி உறுதி செய்யப்பட்ட 2061 ஆம் இலக்கத்தினையும் 2019.02.11 ஆந் திகதியையும் கொண்ட காணித் துண்டுகளை விடுவிக்கும் உறுதிப்பத்திரத்தின்படி இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை பரீட்சிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி
நிதிக்கூட்டுத்தாபன வங்கி,
சேர். சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை,
த. பெ. இல. 2085,
கொழும்பு 02,
2019, செத்தெம்பர் 26.

10-495

---

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவீடு செய்வதற்hன (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்

கடன் இலக்கம் :- 70272500079
கடனாளியின் முழுப் பெயர் : ஜயசூரிய முதியன்சேலாகே பியதிஸ்ஸ பண்டார

பொலன்னறுவையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஆரியசேன கால்லகே என்பவரினால் எழுதி உறுதி செய்யப்பட்ட 3321 ஆம் இலக்கத்தினையும் 2017.08.03 ஆந் திகதியையும் கொண்ட அடகுப் பத்திரங்களின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம், இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனாளியினால், அடகு வைக்கப்பட்டதன் பின்பு பெற்றுக் கொண்ட கடனை வங்கிக்கு மீளச்செலுத்த தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடகுப் பத்திரங்களின்படி, ஐம்பத்து மூன்று இலட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து நாநூற்று ஒன்பது ரூபா அறுபத்தி ஐந்து சதம் (ரூபா. 53,47,409.65) 2019.08.31 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்,

(1) குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான நாற்பத்தொரு இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து நாநூற்று ஐம்பத்து ஏழு ரூபா இருபத்து எட்டு சதத்தினையும், (ரூபா 41,98,457.28) 2019.08.31 ஆந் திகதி வரையிலான நிலுவைத் தொகையாக பதினொரு இலட்சத்து நாற்பத்து எட்டாயிரத்து தொளாயிரத்து ஐம்பத்து இரண்டு ரூபா முப்பத்து ஏழு சதத்தினையும் (ரூபா 11,48,952.37) இதன்படி மொத்தமாக ஐம்பத்து மூன்று இலட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து நாநூற்று ஒன்பது ரூபா அறுபத்து ஐந்து சதத்தினையும் (ரூபா 53,47,409.65)

(2) குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத நாற்பத்தொரு இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து நாநூற்று ஐம்பத்து ஏழு ரூபா இருபத்து எட்டு சதத்தினையும், (ரூபா 41,98,457.28) அறவீடு செய்ய வேண்டிய 17.50% வீதமான வருடாந்த வட்டியினையும் 2019.09.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் (அந்த இரு தினங்களும் அடங்கலாக அறவீடு செய்து கொள்வதற்காவும்,

(3) 2019.09.01 ஆந் திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) மேற்குறிப்பிட்ட மொத்த நிலுவைத் தொகையான பதினொரு இலட்சத்து நாற்பதாயிரத்து ஐநூற்று ஐம்பத்து இரண்டு ரூபா இருபத்து ஏழு சதத்திற்காக (ரூபா 11,40,552.27) மாதாந்தம் 2.00% தாமத வட்டி ஒன்றினை அறவீடு செய்வதற்காகவும்,

(4) 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை,

அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றை கழித்த பின்னர்) மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் பீ.கே.ஈ. சேனாபத்தி என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.".

### அட்டவணை

வடமத்திய மாகாணத்தில், பொலன்நறுவை மாவட்டத்தில், சிங்கள பத்துவவில், ஹிங்குரக்கொட பிரதேச சபை எல்லையில் மற்றும் ஹிங்குரக்கொட பிரதேச செயலாளர் பிரிவுக்கு உப்பட்ட, இலக்கம் 76 - R.B. 01 கிராம அலுவலர் பிரிவில், மின்னேரிய முதலாவது கட்டம் ஹத்தமுன கிராமத்தில் அமைந் துள்ள தமனே மூக்கலான என்ற காணிக்கு 2016.11.15 ஆந் திகதி, அனுமதிபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. ஏ. பிரேமரத்ன என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 3384/16 என்ற இலக்க காணிவரைபடத்தின்படி G என்ற காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கு : D என்ற இலக்க காணித்துண்டும்; கிழக்கு : 322 ஆம் இலக்க காணித்துண்டும்; தெற்கு : ஹிங்குரக்கொட நகரில் இருந்து பிரதான பாதை வரையிலான பிரதேச சபை பாதையும் ; மேற்கு : H என்ற இலக்க காணித்துண்டும் (4 மீட்டர் அகலப் பாதை) எல்லைகளாக அமைந்து காணப்படுகின்றன. இக்காணித்துண்டின் விஸ்தீரணம் ஒரு றூட் ஆகும். (00ஏ. 01றூ. 00பே.) மற்றும் பூச்சியம் தசம் ஒன்று பூச்சியம் ஒன்று இரண்டு (0.1012) ஹெக்டயர்களாகும். இக்காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள் தாவரங்கள் மற்றும் அனைத்துடனும்.

மேற்குறிப்பிட்ட G என்ற இலக்க காணித்துண்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு சமமான ஒன்றாகும்.

மேற்குறிப்பிட்ட எல்லையினுள் மின்னேரிய முதலாவது கட்டம் ஹத்தமுன கிராமத்தில் அமைந்துள்ள தமனே மூக்கலான என்ற காணிக்கு 2016.09.05 ஆந் திகதி, அனுமதிபெற்ற நில அளவையாளர் பீ. எஸ். அலஹகோன் என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 7899 என்ற இலக்க காணிவரைபடத்தின்படி 01 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கு : இ. கு. கா. பொல 07 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 142 ஆம் இலக்க காணித்துண்டின் ஒரு பகுதியும் 322 ஆம் இலக்க காணித்துண்டும் ; கிழக்கு : இ. கு. கா. பொல 07 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 06 ஆம் இலக்க காணித்துண்டும் மற்றும் 322 ஆம் இலக்க காணித்துண்டும் ; தெற்கு : இ. கு. கா. பொல 07 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 142 ஆம் இலக்க காணித்துண்டின் ஒரு பகுதியும் 06 ஆம் இலக்க காணித்துண்டும் ; மேற்கு : இ. கு. கா. பொல 07 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 142 ஆம் இலக்க காணித்துண்டின் ஒரு பகுதியும் எல்லைகளாக அமைந்து காணப்படுகின்றன. இக்காணித்துண்டின் விஸ்தீரணம் ஒரு றூட் ஆகும் (0ஏ. 01றூ. 0பே.) மற்றும் பூச்சியம் தசம் ஒன்று பூச்சியம் ஒன்று இரண்டு (0.1012) ஹெக்டயர்களாகும். இக்காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள், தாவரங்கள், பழவகைகள் மற்றும் அனைத்துடனும் பொலன்நருவை காணிப் பதிவுக் காரியாலயத்தில் இலக்கம் LDO/G/17/168 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இலக்கம் 270 (பொ/பி/ஹிங்கு/4282) என்ற அளிப்புப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள (464 ஆம் அத்தியாயம்) காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் இந்த காணி பாதுகாப்பு ஷரத்து மற்றும் நிபந்தனைகளின் கீழ் வங்கிக்கு அடகு வைப்பதற்காக ஹிங்குரக்கொட உதவி

பிரதேச செயலாளரின் முன் அனுமதியுடன் அவரது இலக்கம் එන්සීපී/එච්ජී/එල්3/126A என்று இலக்கத்தினையுடைய 2017.05.31 ஆந் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் வழங்கப் பட்டுள்ளது.

### இரண்டாவது அட்டவணை

**பாதுகாப்பு ஷரத்துக்கள்**

1. காணியில் அல்லது அதனகத்தே காணப்படும் அனைத்து கனிய வளங்களின் (இந்தப் பதத்தின் மூலம் இங்குள்ள பெறுமதிமிக்க மாணிக்க கற்களும் உள்ளடக்கப்படும்.) உரிமை மற்றும் அகழ்வு, தேடுதல், நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் மற்றும் அவ்வறான கனிய வளங்களை வெளியில் எடுத்துச் செல்வதற்குமான உரிமை அரசிடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2. காணிக்கான உரித்து தொடர்பில் காணியின் உரிமையாளர் என்ற வகையில் காணப்படும் உரிமையானது இந்த அளிப்பு இடம்பெறும் திகதியில் காணி மீது காணப்படும் பாதைக்கான உரிமையுடன் காணி மீதுள்ள ஏனைய உரிமைகளுக்கும் உட்பட்டதாகவே இருக்கும்.

**நிபந்தனைகள்**

1. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள குறைந்த உப பிரிவுகளாக பிரிக்கப்படும் அலகுகள், அதாவது உயர் நிலங்கள் 1/4 ஏக்கர் அல்லது .......... ஹெக்டயர் நீர்ப்பாசன வசதியுள்ள காணிகள் .......... னை விட அளவில் குறைந்தாக காணப்படும் காணியின் பிரிக்கப்பட்ட ஒரு துண்டினை/உரிமையாளரினால் வெளியேற்ற முடியாது.

2. இங்கு குறிப்பிடப்பட்ட குறைந்த அளவினை விட, அதாவது 1/8 அளவினை விட குறைவாக குறிப்பிட்ட காணி துண்டாடப்பட்டு உரிமையாளரினால் பிறருக்கு வழங்க முடியாது.

3. எந்த ஒருவரும் 1 ஆவது நிபந்தனையில் குறிப்பிடப்பட்ட குறைந்த அளவுக்கு குறைவான பரப்பளவு கொண்ட காணியின் பிரிக்கப்பட்ட ஒரு காணித்துண்டின் உரிமை யாளராக இருக்க முடியாது.

4. எந்த ஒருவரும் 2அவது நிபந்தனையில் குறிப்பிடப்பட்ட குறைந்த அளவுக்கு குறைவான பரப்பளவு கொண்ட காணியின் பிரிக்கப்பட்ட ஒரு காணித்துண்டின் உரிமையாளராக இருக்க முடியாது.

5. காணிக்கு அல்லது அதன் ஏதேனும் ஒரு துண்டிற்கு நீர் வழங்க முடியுமாயின் அல்லது ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டுள்ள ஏதேனும் நீர்பாசன நடவடிக்கைக் கான நிர்மாணப்பணி அல்லது நிர்மாணிக்கப்படவுள்ள ஒரு விடயம் காரணமாக நீரினை வழங்க முடியுமாயின் அல்லது அந்த நீர் வழங்கலை மேற்கொள்ள சாத்தியமான பிரதேசம் சம்பந்தமாக உரிமையாளர் (453 ஆவது அத்தியாயம்) நீர்பாசன கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கும் ஏற்ப செயற்படவேண்டும்.

6. அரசாங்க அதிபரிடமிருந்து எழுத்து மூலமான அனுமதியுடன் சம்பந்தப்பட்ட அதிகாரியிடமிருந்து உரிமம் பெறாது அந்தக் காணியின் மீது அல்லது அதன் அகத்தே காணப்படும் எந்த இரு கனிய வளங்களையும் அகழ்தல், தேடுதல் அல்லது உபயோகித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவது அல்லது வேறு வகைகளில் வெளியேற்றுவது உரிமையாளரினால் தவிர்க்கப்பட வேண்டும்.

7. பிரதேச செயலாளரின் முன் அனுமதியினை எழுத்து மூலமாக பெற்றுக் கொள்ளாது காணியினையோ அல்லது அதில் உள்ள எந்த ஒரு பகுதியினையோ விற்பனை செய்யக்கூடாது.

பொலன்நறுவையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஆரியசேன கால்லகே என்பவரினால் எழுதி உறுதி செய்யப்பட்ட 3321 ஆம் இலக்கத்தினையும் 2017.08.03 ஆந் திகதியையும் கொண்ட அடகுப் பத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்ட வணையில் பரீட்சிக்கப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி
நிதிக்கூட்டுத்தாபன வங்கி,
சேர். சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை,
த. பெ. இல. 2085,
கொழும்பு 02,
2019, செத்தெம்பர் 26.

10-496

---

### கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீயினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப் பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் (இதனகத்துப் பின்னர் யூனியன் வங்கி எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால், 2019, யூலை 23 ஆந் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தின்போது பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

“இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் (இதனகத்துப் பின்னர் “கடப்பாடுடையவர்” எனக் குறிப்பீடு

செய்யப்படுகின்ற) இல. 265/ 5, அபொன்சு மாவத்தை, தெவடகஹவத்த, நீர்கொழும்பு என்ற முகவரியைச் சேர்ந்த குருப்பு முதியன்செலாகே சமந்த்ரிகா பிரியங்கனி விக்ரமசிங்க எனவும் குருப்பு முதியன்செலாகே சமந்த்ரெகா பிரியங்கனி விக்ரமசிங்க (தேசிய அடையாள அட்டை இல. 666181301V ஐக் கொண்ட) என்பவர் (இதனகத்துப்பின்னர் யூனியன் வங்கி என அழைக்கப்படுகின்ற) PB676PQ கம்பனிப் பதிவிலக்கத்தையுடைய கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீ வங்கியிலிருந்து வங்கி மேலதிகப் பற்று மற்றும் தவணைக் கடன்கள் என்ற முறையில் வங்கி வசதிகளைப் பெற்றுக் கொண்டிருப்பதாலும், அத்தோடு சொல்லப்பட்ட கடப்பாடுடையவர் சொல்லப்பட்ட தவணைக் கடன் வசதி களின் காரணமாக சொல்லப்பட்ட யூனியன் வங்கிக்கு செலுத்த வேண்டிய ரூபா ஒரு கோடியே ஐம்பது இலட்சம் (ரூ. 1,50,00,000.00) தொகை மற்றும் அதன் மீதான வட்டி கொடுப்பனவுகளுக்கு பிணைப்பொறுப்பாக, பிரசித்த நொத்தாரிசு ஜீ.ஏ.எல்.பீ.டீ. சில்வா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ரூபா ஒரு கோடியே ஐம்பது இலட்சம் (ரூபா 1,50,00,000.00) தொகைக்கான 2018.05.04 ஆந் திகதியுடைய 2674 ஆம் இலக்க ஆரம்ப ஈட்டுமுறியை நிறைவேற்றி இதன் அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்ட ஆதனத்தை ஈடுவைத்து அடமானம் செய்திருக்கின்றார்.

அத்தோடு 2019.05.12 ஆந் திகதியில் உள்ளவாறு, இலங்கை ரூபா ஒரு கோடியே நாற்பத்து நான்கு இலட்சத்து நான்காயிரத்து எண்பத்தைந்து ரூபா எண்பத்தொன்பது சதம் (ரூபா 1,44,04,085.89) தொகை மற்றும் கீழே குறிப்பிடப்படுகின்றவாறு அத்தொகை மீது மேலதிக வட்டியும் யூனியன் வங்கிக்கு சொல்லப்பட்ட கடப்பாடுடையவரிடமிருந்து வருமதியாகவும் மற்றும் சேர வேண்டியதாகவும் உள்ளது:

1. 2019.05.12 ஆந் திகதியில் உள்ளவாறு 0100101000000836 ஆம் இலக்க வங்கி மேலதிகப்பற்று வசதி மீது மொத்த நிலுவையாக இருக்கின்ற முப்பத்தைந்து இலட்சத்து ஆயிரத்து அறுநூற்று எட்டு ரூபா பதினேழு சதம் (ரூபா 35,01,608.17) தொகையுடன் சேர்த்து 2019.05.13 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை வருடத்துக்கு 28% சதவீத வட்டியும்;

2. 2019.05.12 ஆந் திகதியில் உள்ளவாறு கடன் வசதி இல. 0104001000103041 மீது மொத்த நிலுவையாக இருக்கின்ற அறுபத்தைந்து இலட்சத்து ஐம்பத்தொறாயிரத்து எண்ணூற்று நாற்பத்தைந்து ரூபா நாற்பது சதம் (ரூபா 65,51,845.40) தொகை மற்றும் மூலதன நிலுவையாக இருக்கின்ற அறுபத்து இரண்டு இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து நாநூற்று ஐம்பத்திரண்டு ரூபா தொண்ணூறு சதம் (ரூ. 62,29,452.90) தொகை மீது 2019.05.13 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை வருடத்துக்கு 22% சதவீத வட்டியும்,

3. 2019.05.12 ஆந் திகதியில் உள்ளவாறு கடன் வசதி இல. 0104001000103078 மீது மொத்த நிலுவையாக இருக்கின்ற நாற்பத்து மூன்று இலட்சத்து ஐம்பதாயிரத்து அறுநூற்று முப்பத்து இரண்டு ரூபா முப்பத்திரண்டு சதம் (ரூபா 43,50,632.32) தொகை மற்றும் மூலதன நிலுவையாக இருக்கின்ற நாற்பத்தொரு இலட்சத்து முப்பத்து ஐந்தாயிரத்து முந்நூற்று இருபத்தேழு ரூபா அறுபத்தெட்டு சதம் (ரூ. 4,135,327.68) தொகை மீது 2019.05.13 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை வருடத்துக்கு 22% சதவீத வட்டியும்.

யூனியன் வங்கிப் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ், சொல்லப்பட்ட பணிப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் செயல்படுவதனாலும், சொல்லப்பட்ட கடப்பாடுடையவர் மேற்குறித்த தவணைக் கடன் நிலுவைகளை அல்லது அவற்றின் பகுதிகளை கொடுத்துத் தீர்ப்பதில் தவணை தவறியுள்ளார் எனத் திருப்திப்பட்டுள்ளதனாலும், சொல்லப்பட்ட நிதி வசதிகள் மீது 2019.05.12 ஆந் திகதியில் உள்ளவாறு யூனியன் வங்கிக்கு சொல்லப்பட்ட கடப்பாடுடையவரிடமிருந்து வருமதியானதும் மற்றும் சேர வேண்டியதுமான மொத்த நிலுவைத் தொகையாகிய இலங்கை ரூபா ஒரு கோடியே நாற்பத்து நான்கு இலட்சத்து நான்காயிரத்து எண்பத்தைந்து ரூபா எண்பத்தொன்பது சதம் (ரூ. 1,44,04,085.89) தொகையும், 2019.05.13 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை சொல்லப்பட்ட தவணைக் கடன் வசதியின் மீது மேலே சொல்லப்பட்ட வீதங்களில் மேலதிக வட்டியையும், சொல்லப்பட்ட 2674 ஆம் இலக்க ஆரம்ப ஈட்டு முறி மற்றும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மேற்குறித்த சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரமும் யூனியன் வங்கிக்கு மீட்டுக் கொள்வதற்கு உரித்துடைய அனைத்து ஏனைய தொகைளையும் மீட்டுக்கொள்வதற்காக, சொல்லப்பட்ட பிரசித்த நொத்தாரிசு ஜீ. எல். பீ. டீ. சில்வா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2674 ஆம் இலக்க ஆரம்ப ஈட்டுமுறியின் கீழ் மற்றும் அவற்றின் பயனால் யூனியன் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட ஆதனத்தை சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் நியதிகளினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கு உரிமம்பெற்ற ஏல விற்பனையாளராகிய எல். பீ. சேனாநாயக்க ஒக்ஷனியர்ஸ் நிறுவனத்திற்கு 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மேற்குறித்த சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் அதிகாரமளிப்பதற்கு இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.".

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் அலுத்குரு கோரளை பள்ளே பற்று, கடான பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை எல்லைகளக்குள் இல. 161, மஹஹுனுபிடிய

கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் மஹஹுனுபிடிய கிராமத்தில் அமைந்துள்ள "தெவடகாவத்த" என அழைக்கப்படுகின்ற காணிக்கு உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. எஸ். எஸ். பெரேரா அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 2015.07.11 ஆந் திகதியுடைய 7774/1 ஆம் இலக்க நில அளவை வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு விபரிக்கப்பட்ட துண்டம் 01 என அழைக்கப்படுகின்ற காணிக்கு எல்லைகள் பின்வருமாறு- வடக்கு: ஸ்டேன்லி சில்வா அவர்களின் காணி; கிழக்கு : அபொன்சு மாவத்த; தெற்கு : செட்ரிக் அபொன்சு அவர்களின் காணிமற்றும்;மேற்கு:ஏ.சந்தன குமார அவர்களின் காணி ஆகிய எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணி முப்பத்தொன்பது தசம் ஒன்று பூச்சியம் பேர்ச் (00ஏ. 00றா. 39.10பே.) விஸ்தீரணத்தைக் கொண்டு மற்றும் அதனகத்தே உள்ள கட்டடங்கள், மரங்கள் மற்றும் சகலதையும் உள்ளடக்கியது.

சொல்லப்பட்ட துண்டம் 01 கீழே விபரிக்கப்படுகின்ற காணியின் ஒரு மீள் அளவீடாகும் :

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் அலுத்குரு கோரளை துனகஹ பற்று, கடான பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை எல்லைகளுக்குள் இல. 161 மஹஹுனுபிடிய கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் மஹஹுனுபிடிய கிராமத்தில் அமைந்துள்ள "தெவடகஹகொடஸ" என அழைக்கப்படுகின்ற காணிக்கு உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எச். எல். குரூஸ் தாபெரேரா அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 1986.09.16 ஆந் திகதியுடைய 4703/ 1986 ஆம் இலக்க நில அளவை வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு விபரிக்கப்பட்ட காணியின் எல்லைகள் பின்வருமாறு- வடக்கு : ஸ்டேன்லி சில்வா அவர்களின் காணி; கிழக்கு : மீரிகம வீதிக்குச் செல்கின்ற 12 அடி அகலப் பாதை ; தெற்கு : மார்தா ஹாமி அவர்களால் உரிமைகோரப்படுகின்ற உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். எல். குரூஸ் தாபெரேரா அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 4233/1894 ஆம் இலக்க நில அளவை வரைபடத்தில் துண்டம் B, மற்றும் ; மேற்கு : அரச காணி ஆகிய எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணி ஒரு றூட் (00ஏ. 01றூ. 00பே.) விஸ்தீரணத்தைக் கொண்டு மற்றும் அதனகத்தே உள்ள கட்டடங்கள், மரங்கள் மற்றும் சகலதையும் உள்ளடக்கி நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் H253/ 109 பிரிவு/ இருமடியிலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, தற்போது H451/ 59 பிரிவு /இருமடியிலக்கத்துக்கு முன் கொண்டுவரப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இனோகா ஜயவர்தன,
பணிப்பாளர் சபைச் செயலாளர்.

10-442

## சம்பத் வங்கி பீஎல்சீ

( முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

வீ. எஸ். ரீ. டி மெல்
கணக்கு இல 0177 5000 5055

2019.08.29 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:-

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு-2, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக கொழும்பு பிரிசித்த நொத்தாரிசுகளான ஏ. ஆர். உதயங்க என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018 , நவெம்பர் 29 மற்றும் 2019, மாச்சு 14 ஆந் திகதிகளிடப்பட்ட இல. 00042507715 ஐ ஏற்ற உரித்து உறுதி சான்றிதழ் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டவர்கள் என்ற வகையில் கடன்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் விதானெலாகே ஷெனோன் டிரென்குயில் டி மெல் என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், 2018, நவெம்பர் 29 மற்றும் 2019, மாச்சு 14 ஆந் திகதிகளிடப்பட்ட இல. 00042507715 ஐ ஏற்ற உரித்து உறுதி சான்றிதழின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாயில் இரண்டு கோடியே பதின் எட்டு இலட்சத்து எழுபத்து ஒன்பதாயிரத்து தொளாயிரத்து எண்பத்தி எட்டு ரூபா முப்பத்தி மூன்று சதம் (ரூபா 2,18,79,988.33) 2019, யூலை 16 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட இரண்டு கோடியே பதின் எட்டு இலட்சத்து எழுபத்தி ஒன்பதாயிரத்து தொளாயிரத்து எண்பத்தி எட்டு ரூபா முப்பத்தி மூன்று சதம் (ரூபா. 2,18,79,988.33) 2019, யூலை 17ஆந் திகதி முதல் 2018, நவெம்பர் 29 மற்றும் 2019, மாச்சு 14 ஆந் திகதிகளிடப்பட்ட இல. 00042507715 ஐ ஏற்ற உரித்து உறுதி சான்றிதழ் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே நாற்பத்தி ஏழு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து அறு

நூற்று தொண்ணூற்றி ஆறு ரூபா இருபத்தி இரண்டு சதம் (ரூபா 1,47,34,696.22) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் நான்கு வீதம் (14%) மேலும் முப்பது இலட்சம் ரூபா (ரூபா. 30,00,000/-) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் ஆறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்படிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட 2018, நவெம்பர் 29 மற்றும் 2019, மாச்சு 14 ஆந் திகதிகளிடப்பட்ட இல. 00042507715 ஐ ஏற்ற உரித்து உறுதி சான்றிதழ் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனபத்தி என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீள அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.”.

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மொரட்டுவை பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் லக்ஷபத்திய தெற்கு இல. 550 கிராம அலுவலர் பிரிவின் லக்ஷ பத்தியவில் அமைந்த “மீகாஹாவத்த” என்றழைக்கப்படும் காணிக்கு நில அளவையாளர் நாயகத்தினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட இல. 520210 எனும் கெடஸ்த்தர் வரைப்படத்தில் இல. 18 எனும் கட்டத்தில் காட்டப்பட்ட Parcel 0114 என குறிப்பிடப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன- வடக்கு: பார்சல் 105, லொட் 104 மற்றும் லொட் 103; கிழக்கு: ஜுபிலி வீதி; தெற்கு : பார்சல் 115, 116 மற்றும் 117 மற்றும் ; மேற்கு : லொட் 113, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் சைபர் தசம் சைபர் ஆறு இரண்டு மூன்று ஹெக்டாயர் (0.0623 ஹெக்.) விஸ்தீரணத்தை கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 520210 எனும் கெடஸ்த்தர் வரைபடத்திற்கு அமைவாக தெல்கந்த- நுகேகொடை காணிப் பதிவகத்தில் உரித்து உறுதி இல. 00042507715 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10-479

**சம்பத் வங்கி பீஎல்சீ**

( முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*2011 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

ஜீ. வீ. யூ. கே. ரனசிங்ஹ
கணக்கு இல.: 0101 5000 3178/0101 5000 6630

2019, ஓகத்து மாதம் 29 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:-

“PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு 02, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இலக்கம் 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக பிரசித்த நொத்தாரிசுகளான டபிள்யூ. எஸ். கல்ஹாரி என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014, ஒற்றோபர் 14 ஆந் திகதியிடப்பட்ட இல. 407 மற்றும் 2018, சனவரி 11 ஆந் திகதியிடப்பட்ட இல. 3084 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக் கொண்ட கடனை, கடன்பட்டவர்கள் என்ற வகையில் கடன்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கன்ஹத்தே வியன்வல உதய குமார ரணசிங்ஹ என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இலக்கங்கள் 407 மற்றும் 3084 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் ஒரு கோடியே இருபத்தி ஐந்து இலட்சத்து தொண்ணூற்றி நான்காயிரத்து எண்ணூற்று எண்பத்தி ஐந்து ரூபா எழுபத்தி ஒரு சதம் (ரூ. 1,25,94,885.71) 2019, யூலை 18 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட ஒரு கோடியே இருபத்தி ஐந்து இலட்சத்து தொண்ணூற்றி நான்காயிரத்து எண்ணூற்று எண்பத்தி ஐந்து ரூபா எழுபத்தி ஒரு சதம் (ரூ. 12,594,885.71) 2019, யூலை 19 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 407 மற்றும் 3084 எனும் ஈட்டுமுறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே இருபத்தி ஒரு இலட்சத்து இருபத்தி ஆறாயிரம் ரூபா (ரூ, 1,21,26,000.00) இத்துடன்

மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 407 மற்றும் 3084 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான கே. பீ. என். சில்வா என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.".

## அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கங்க பாஹால கோரளேயின் உடபலாத்த கம்பள நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவின் சின்ஹபிட்டிய (தெற்கு) கிராம அலுவலர் பிரிவின் ரத்மல்கடுவையில் அமைந்த ரத்மல்கடுவ வீதி, வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 37 மற்றும் 39 ஐ ஏற்ற "சின்ஹபிட்டிய எஸ்டேட்", என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். எச். கொடவத்த என்பவரால் தயாரிக்கப்பட்ட 2010, மாச்சு 24 ஆந் திகதி பிற்குறிப்பிடப்பட்ட 2000, சனவரி 26 ஆந் திகதியிடப்பட்ட இல. இல. 380 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிடப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : நீர்வடிகால் மற்றும் இல. 261 எனும் வரைபடத்தில் லொட் 1 B ; கிழக்கு : ரத்மல்கடுவ வீதி ; தெற்கு : இல. 380 எனும் வரைபடத்தில் லொட் 2 மற்றும் கூறப்பட்ட காணி மாக்ரட் ஹெட்டிஆரச்சிக்கு உரித்தானது மற்றும் ; மேற்கு : கூறப்பட்ட காணி அபேசிங்ஹ என்பவரின் வாரிசுகளினால் உரிமம் கோரப்படுவதாகும், ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பத்து நான்கு தசம் ஒன்பது ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 34.95பே.) அல்லது 080884 ஹெக்டேயர்கள் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 380 அமைவாக கம்பொல காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் E21/132 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10-475/1

## சம்பத் வங்கி பீ. எல். சீ.

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கிம்ஹான ஃபெஷன் (பிரைவேட்) லிமிட்டெட்
கணக்கு இல.: 0105 1000 0833

2019, ஓகத்து மாதம் 29 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:-

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு-2, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக கண்டி பிரிசித்த நொத்தாரிசுவான ஜே. சீ. ஆர். ரண்கம என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015, யூன் 30 ஆந் திகதியிடப்பட்ட இல. 997 மற்றும் 2018, ஓகத்து 30 ஆந் திகதியிடப்பட்ட இல. 2519 எனும் ஈட்டு முறிகளின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டவர்கள் என்ற வகையில் கடன்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் "கிம்ஹான ஃபெஷன் (பிறைவேட்) லிமிட்டெ" மற்றும் லஹிரு கிம்ஹான திம்புல்கஸ்தென்ன என்பவர் கடன்பட்டார் என்ற வகையில் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால்,

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு-2, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக கண்டி பிரிசித்த நொத்தாரிசுவான ஜே. சீ. ஆர். ரண்கம என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016, சனவரி 27 ஆந் திகதியிடப்பட்ட இல. 1237 மற்றும் 2018, ஓகத்து 30 ஆந் திகதியிடப்பட்ட இல. 2521 எனும் ஈட்டு முறிகளின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடன்பட்டார் எனும் வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் "கிம்ஹான ஃபெஷன் (பிறைவேட்) லிமிட்டெ" கடன்பட்டார் என்ற வகையில் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால்,

கூறப்பட்ட இலக்கங்கள் 997, 2519, 1237 மற்றும் 2521 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக

செல்லுபடியாகும் ரூபா மூன்று கோடியே ஆறு இலட்சத்து பதின் ஏழாயிரத்து முந்நூற்று ஐம்பத்தி எட்டு ரூபா இருபது சதம் (ரூபா 30,617,358.20) 2019, ஓகத்து 07 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட மூன்று கோடியே ஆறு இலட்சத்து பதின் ஏழாயிரத்து முந்நூற்று ஐம்பத்தி எட்டு ரூபா இருபது சதம் (ரூபா 30,617,358.20) 2019, ஓகத்து 08 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 997, 2519, 1237 மற்றும் 2521 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை முறையே இரண்டு கோடியே தொண்ணூற்றி ஐந்து இலட்சம் ரூபா (ரூபா 29,500,000.00) கட்டணத்திற்காக at the rate of Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு இரண்டு வீதம் (2%) (Floor rate of 13.5) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 997, 2519, 1237 மற்றும் 2521 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான கே. பீ. என். சில்வா என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.".

### அட்டவணை

i. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், குண்டசாலை பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் பாத்ததும்பர உடுகம்பஹா கோரளே தீகிரி மடவல கிராம அலுவலர் பிரிவின் அம்முனுகமையில் அமைந்த கிரிமெட்டிய வீதி, வரிமதிப்பீட்டு இல. 600 ஐ ஏற்ற "தும்பகோல ஹேன கெதர வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். திலக்கரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2000, ஓகத்து 14 ஆந் திகதி உப பிரிவாக்கப்பட்டது) உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். எம். சமரசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2000, நவெம்பர் 18 மற்றும் 2001, ஓகத்து 21 ஆந் திகதியிடப்பட்ட இல. 785 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 10A எனக் குறிடப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன : வடக்கு: இதே வரைபடத்தின் லொட் 9; கிழக்கு : யக்காஹாபிட்டிய முதல் மெனிக்ஹின்ன வரையான வீதி ; தெற்கு : வீடுகள் முதல் பிரதான வீதி வரையான வீதி (பிச) மற்றும் ; மேற்கு : இதே காணியின் லொட் 10B (லொட் 1B என பதிவுசெய்யப்பட்டுள்ளது), ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபது பேர்ச் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 785 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் D19/ 24 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ii. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், குண்டசாலை பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் பாத்ததும்பர உடுகம்பஹா கோரளே தீகிரி மடவல கிராம அலுவலர் பிரிவின் அம்முனுகமையில் அமைந்த கிரிமெட்டிய வீதி, வரிமதிப்பீட்டு இல. 600 ஐ ஏற்ற "தும்பகோல ஹேன கெதர வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். திலக்கரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2000, ஓகத்து 14 ஆந் திகதி உப பிரிவாக்கப்பட்டது) உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். எம். சமரசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2000, நவெம்பர் 18 மற்றும் 2001, ஓகத்து 21 ஆந் திகதியிடப்பட்ட இல. 785 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 10B எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன : வடக்கு: இதே வரைபடத்தின் லொட் 9; கிழக்கு : இதே காணியின் லொட் 10A (லொட் 1 A என பதிவு செய்யப்பட்டுள்ளது); தெற்கு : வீடுகள் முதல் பிரதான வீதி வரையான வீதி (பிச) மற்றும் புஞ்சிராலலாகெவத்த மற்றும் ; மேற்கு : இதே காணியின் லொட் 8, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதின் ஏழு தசம் ஒன்பது மூன்று பேர்ச் (0ஏ. 0றூ. 17.93பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 785 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D19/ 25 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. எம். திலக்கரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2015, யூன் 25 ஆந் திகதியிடப்பட்ட இல. 1432 கூறப்பட்ட லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணிகள் அண்மைய நில அளவீட்டிற்கமைவானதாகும்.)

(இலக்கங்கள் 997 மற்றும் 2519 எனும் ஈட்டு முறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

1. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், குண்டசாலை பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் பாத்ததும்பர உடுகம்பஹா கோரளே சிரிமல்வத்த கிழக்கு இல. 650 கிராம அலுவலர் பிரிவின் சிரிமல்வத்தையில் அமைந்த "அம்பலமகாவ கொட்டுவ" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். திலக்கரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2015, யூன் 25 ஆந் திகதியிடப்பட்ட இல. 1434 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிடப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். எம். கே. பி. மாவலகெதர என்பவரால் தயாரிக்கப்பட்ட 1172 எனும் வரைபடத்தின் லொட் 3; கிழக்கு : லேவெள்ள முதல் சிரிமல்வத்த விஹாரை வரையான வீதி ; தெற்கு : உத்தரவுபெற்ற

நில அளவையாளர் ஏ. எம். திலக்கரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1416 எனும் வரைப்படத்தின் லொட் 2 மற்றும் ; மேற்கு : எச். எம். அபேரத்ன உரிமம் கோரும் பன மன்டபேஹேன, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் எட்டு தசம் ஒன்று பேர்ச் (0ஏ. 0றூ. 8.1பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1434 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D107/135 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட லொட் 1 கீழே விபரிக்கப்பட்ட காணிகளின் ஒன்றிணைப்பும் மீள் அளவீடுமாகும் :

i. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், குண்டசாலை பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் பாத்ததும்பர உடுகம்பஹா கோரளே சிரிமல்வத்த கிழக்கு இல. 650 கிராம அலுவலர் பிரிவின் சிரிமல்வத்தையில் அமைந்த "அம்பலமகாவ கொட்டுவ" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். எம். கே. பீ. மாவலகெதர என்பவரால் தயாரிக்கப்பட்ட 1989, மே 25 ஆந் திகதியிடப்பட்ட இல. 1172 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 4 எனக் குறிடப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: லொட் 3; கிழக்கு : லொட் 5 ; தெற்கு : லேவெள்ள முதல் சிரிமல்வத்த விஹாரை வரையான கிராம சபை வீதி மற்றும் ; மேற்கு : எச். எம். அபேரத்ன உரிமம் கோரும் பன மன்டபேஹேன, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் நான்கு தசம் ஒன்று பேர்ச் (0ஏ. 0றூ. 4.1பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1172 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D107/29 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ii. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், குண்டசாலை பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் பாத்ததும்பர உடுகம்பஹா கோரளே சிரிமல்வத்த கிழக்கு இல. 650 கிராம அலுவலர் பிரிவின் சிரிமல்வத்தையில் அமைந்த "அம்பலமகாவ கொட்டுவ" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். திலக்கரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2015, மே 25 ஆந் திகதியிடப்பட்ட இல. 1416 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிடப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: எஸ். எம். கே. பீ. மாவலகெதர என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 1172 எனும் வரைபடத்தில் லொட் 4; கிழக்கு : லேவெள்ள முதல் சிரிமல்வத்த விஹாரை வரையான கிராம சபை வீதி ; தெற்கு : இங்கமைந்த லொட் 2 மற்றும் ; மேற்கு : எச். எம். அபேரத்ன உரிமம் கோரும் காணி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் நான்கு பேர்ச் (0ஏ. 0றூ. 4பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1416 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D107/28 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இலக்கங்கள் 1237 மற்றும் 2521 எனும் ஈட்டு முறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10-475/2

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ

1990ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கடன் கணக்கு இலக்கம் : 2244208
நிவ் சென்ரா சேர்விஸ் ஸ்டேஷன்

2019, யூன் 28 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டமொன்றில் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றிய தீர்மானமாவது :-

(இதனகத்துப் பின்னர் 'கம்பெனி' எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்) கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் முறையாகக் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாவுள்ளதும் PV 65423 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டுள்ளதும் கொழும்பில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டதுமான செல்சீ ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிடெட், (டீஎவ்சீசீ வர்தன வங்கி பீஎல்சீ யின் அடுத்துறுநரான) டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ சார்பில் பிரசித்த நொத்தாரிசு டீகேபீஎன் வாசனா என்பவரினால் எல்லாம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019.01.31 ஆந் தேதிய 955 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும், 2019.01.31 மற்றும் 2019.02.06 ஆந்தேதிய 957 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும், 2019.01.31 மற்றும் 2019.02.06 ஆந் தேதிய 959 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும் அத்துடன் 2019.01.31 மற்றும் 2019.02.06 ஆந்தேதிய 961 ஆம் இலக்க் ஈட்டுமுறிமீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணைதவறியுள்ளதாதலாலும்.

2019, யூலை 31 ஆந்தேதியன்றுள்ளவாறாக எழுநூற்றியைம்பதாயிரத்து எழுநூற்றியைம்பத்தொன்பது ஐக்கிய அமைரிக்க டொலர் எண்பது சதம் (ஐஅடொ 750,759.80) கொண்ட தொகையும் 2019, ஓகத்து 01 ஆந்தேதியிலிருந்து விற்பனைத் தேதி வரை நனூற்றியிருபத்தெட்டாயிரத்து எழுநூற்று பத்து ரூபா எழுபத்தி மூன்று சதம்

(ஐஅடொ 428,710.73) கொண்ட தொகைமீது LIBOR க்குமேல் ஆண்டொன்றுக்கு எட்டுத் சதம் ஐந்து சதவீத (8.5%) வட்டியும். (LIBOR என்பது, LIBOR உதவுத்தொகை செலுத்துநராகவுள்ள வங்கியொன்று கொடுக்கப்பட்டவொரு நாணயத்தில் கொடுக்கப்பட்ட வொரு காலப்பகுதிக்காக எந்தச் சராசரி வீதத்தில் லண்டன் வங்கிகளுக்கிடையேயான சந்தையில் பிணைப்பொறுப்பளிக்கப்படாத நிதியளிப்பைப் பெற்றுக்கொள்ளமுடியுமாவுள்ளதோ லண்டன் நேரத்தில் ஏறத்தாழ மு. ப. 11.55 மணிக்கு ICE அடிமட்ட நிருவாகத் தினால் (IBA) வெளியிடப்பட்ட அந்தச் சராசரி வீதம் என்று பொருளாகும்.) அத்தகைய மீள்விலைகுறித்தலின் (மீளாய்வின்) தேதிகள், ஒவ்வோரண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர், ஆகிய மாதங்களின் முதலாவது வேலை நாளாகவிருக்கும் அத்துடன் முந்நூற்றியோராயிரத்து முந்நூறு ஐக்கிய அமெரிக்க டொலர் (ஐஅடொ 3,01,300.00) கொண்ட தொகைமீது 3 மாத LIBOR க்கு மேல் ஆண்டொன்றுக்கு ஏழு சதவீத (7.0%) வட்டியும் LIBOR என்பது, LIBOR உதவுத்தொகை செலுத்துநராகவுள்ள வங்கியொன்று கொடுக்கப்பட்டவொரு நாணயத்தில் கொடுக்கப்பட்டவொரு காலப்பகுதிக்காக எந்தச் சராசரி வீதத்தில் லண்டன் வங்கிகளுக்கிடையோயான சந்தையில் பிணைப்பொறுப்பளிக்கப்படாத நிதியளிப்பைப் பெற்றுக் கொள்ள முடியுமாகவுள்ளதோ லண்டன் நேரத்தில் ஏறத்தாழ மு.ப. 11.55 மணிக்கு ICE அடிமட்ட நிருவாகத் தினால் (IBA) வெளியிடப்பட்ட அந்தச் சராசரி வீதம் என்று பொருளாகும்). அத்தகைய மீளவிலைகுறித்தலின் (மீளாய்வின்) தேதிகள், ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்ரல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளாகவிருக்கும், மேற்கூறப்பட்ட 955, 957, 959 மற்றும் 961 ஆம் இலக்க ஈட்டுமுறிகள்மீது சொல்லப்பட்ட செல்சீ ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிடெட்டிடமிருந்து டீஎவ்சீசீ பீஎல்சீக்கு வருமதியாகவும் சேர்மதியாகவும் இருக்கின்றதாதலாலும்.

டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அவர்களுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 955, 957, 959 மற்றும் 961 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் பொருத்தகனைகளுக்கிணங்க டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீயி னால் உறப்பட்ட எழுநூற்றியைம்பதாயிரத்து எழுநூற்றியைம் பத்தொன்பது ஐக்கிய அமெரிக்க டொலர் எண்பது சதம் (ஐஅடொ 750,759.80) கொண்ட தொகையையும் 2019, ஓகத்து 01 ஆந் தேதியிலிருந்து விற்பனைத் தேதிவரை நானூற்றியிருபத்தெட்டாயிரத்து எழுநூற்றிப்பத்து ஐக்கிய அமெரிக்க டொலர் எழுபத்திமூன்று சதம் (ஐஅடொ 428,710.73) கொண்ட தொகைமீது LIBOR க்குமேல் ஆண்டொன்றுக்கு எட்டுத் தசம் ஐந்து சதவீத (8.5%) வட்டியையும். (LIBOR என்பது, LIBOR உதவுதொகை செலுத்துநராகவுள்ள வங்கியொன்று கொடுக்கப்பட்டவொறு நாணயத்தில் கொடுக்கப்பட்டவொரு காலப்பகுதிக்காக எந்தச் சராகரி வீதத்தில் லண்டன் வங்கிகளுக்கிடையேயான சந்தையில் பிணைப்பொறுப்பளிக்கப்படாத நிதியளிப்பைப் பெற்றுக்கொள்ள முடியுமாகவுள்ளதோ லண்டன் நேரத்தில் ஏறத்தாழ மு. ப. 11.55 மணிக்கு ICE அடி மட்ட நிருவாகத்தினால் (IBA) வெளியிடப்பட்ட அந்தச் சராசரி வீதம் என்று பொருளாகும்.) அத்தகைய மீள் விலைகுறித்தலின் (மீளாய்வின்) தேதிகள், ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்ரல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளாகவிருக்கும், அத்துடன் முந் நூற்றியோராயிரத்து முந்நூற்று ஐக்கிய அமெரிக்க டொலர் (ஐஅடொ 301,300.00) கொண்ட தொகைமீது 3 மாத LIBOR க்குமேல் ஆண்டொன்றுக்கு ஏழு சதவீத (7.0%) வட்டியையும். (LIBOR என்பது, LIBOR உதவுத்தொகை செலுத்துநராகவுள்ள வங்கியொன்று கொடுக்கப்பட்டவொரு நாணயத்தில் கொடுக்கப்பட்டவொரு காலப்பகுதிக்காக எந்தச் சராசரி வீதத்தில் லண்டன் வங்கிகளுக்கிடையேயான சந்தையில் பிணைப்பொறுப்பளிக்கப்படாத நிதியளிப்பைப் பெற்றுக்கொள்ள முடியுமாகவுள்ளதோ லண்டன் நேரத்தில் ஏறத்தாழ மு. ப. 11.55 மணிக்கு ICE அடிமட்ட நிருவாகத்தினால் (IBA) வெளியிடப்பட்ட அந்தச் சராசரி வீதம் என்று பொருளாகும்). அத்தகைய மீள்விலை குறித்தலின் (மீளாய்வின்) தேதிகள், ஒவ்வோரண்டும் சனவரி, ஏப்ரல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளாகவிருக்கும், அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினையும் கீழே விபரிக்கப்படும் காணியையும் கட்டிடங்களையும் கையிருப்புக்களையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவுத்தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து அறவிடுவதற்காக மேற்கூறப்பட்ட ஈட்டுமுறிகள் மூலம் செல்சீ ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிடெட்டினாலும் நிலாந்தி பிரதீபிகா அத்தபத்து என்பவரினாலும் டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீக்கு ஈடுவைப்பட்ட சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் பிகோ சேனாபதி அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.

### 955 ஆம், 959 ஆம் இலக்க ஈட்டுமுறிகள்மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம் களுத்துறை மாவட்டத்தில் ராய்கம் கோறளையின் கும்புக்கே பத்துவில் ஹொறண பிரதேச சபை எல்லைகளினுள்ளும் ஹொறண பிரதேச செயலகப் பிரிவினுள்ளும் ஹலாபிட்டிய 606C இன் கிராம அலுவலர் பிரிவினுள்ளும் கொடிகமுவக் கிராமத்தில் ரணவிரு மாவத்தை வழியாக அமைந்துள்ளதும் அதன்மீதுள்ள எல்லாவற்றுடனும் எட்டபன்விலதெனிய எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டீஏ மென்டிஸ் என்பவரி னால் தயாரிக்கப்பட்ட 1960 நவெம்பர் 27 ஆந் திகதிய 274 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் A எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப் பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங் கலும்: சொல்லப்பட்ட காணித்துண்டம் A பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : எச் எஸ் கருணாரத்னவின் இறப்பர் காணியும் ஐடீ சேதிரிஸின் கறுவாக் காணியும்; கிழக்கு: எட்டபன்வில கும்புர என்றழைக்கப்படும் நெல்வயலும் எச் பபிலிஸ் கருணாரத்னவின் நெல்வயலும் எட்டபன்வில

தெனியவும்; தெற்கு : முன்னாள் வேல் விதான எட்டின் சிங்கோவின் இறப்பர் காணியும் பளுவத்தவும் டீ அன்டி சிங்கோ மற்றும் ஏனையோரின் இறப்பர் காணியும் மற்றும் மேற்கு : டீ அன்டி சிங்கோ மற்றும் ஏனையோரின் பளுவத்த இறப்பர் காணி, பரப்பளவில் இது, அதன்மீதுள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் இரண்டு ஏக்கர் ஒரு ரூட் பத்துப் பேர்ச்சுக்களை (ஏ2, ரூ1, பே10) கொண்டுள்ளதுடன் ஹொறணக் காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுமுள்ளது.

காணித்துண்டம் A எனவடையாளமிடப்பட்ட மேற்படி விவரிக்கப்பட்ட காணித்துண்டு, உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஜீ எம் கமல் பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005 யூலை 17ஆந்தேதிய 97/2005 ஆம் இலக்க அண்மைய நிலஅளவை வரைபடத்தின்படி பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது:

மேல் மாகாணம் களுத்துறை மாவட்டத்தில் ராய்கம் கோறளையின் கும்புக்கே பத்துவில் ஹொறன பிரதேச சபை எல்லைகளினுள்ளும் ஹொறன பிரதேச சபை எல்லைகளினுள்ளும் ஹொறண பிரதேச செயலகப் பிரிவினுள்ளும் ஹலாபிட்டிய 606C இன் கிராம அலுவலர் பிரிவினுள்ளும் கொடிகமுவக் கிராமத்தில் ரணவிரு மாவத்தை வழியாக அமைந்துள்ளதும் எட்டபன்விலதெனிய எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நில அளவையாளர் டீஏ மென்டிஸ் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1960, நவெம்பர் 27 ஆந் திகதிய 274 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டம் A இன் மீள்நிலஅளவையாகவுள்ளதும் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஜீ. எம். கமல் பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005 யூலை 17 ஆந் திகதிய 97/2005 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 1 என வடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்: அதன் எல்லைகள் பின்வருமாறு : வடக்கு : எச். எஸ். கருணாரத்ன மற்றும் ஜேடி சேதிரிஸ் என்போரினால் உரிமைகோரப்பட்ட காணிகள்; கிழக்கு : பபிலிஸ் கருணாரத்னவினால் உரிமைகோரப்பட்ட நெல்வயலும் வீதியும்; தெற்கு : ஈட்டின் சிங்கோ, அன்டி சிங்கோ மற்றும் ஏனையோரினால் உரிமைகோரப்பட்ட காணிகள் மற்றும் மேற்கு : ஈட்டின் சிங்கோ, அன்டி சிங்கோ மற்றும் ஏனையோரினால் உரிமைகோரப்பட்ட காணிகள், பரப்பளவில் இது, அதன்மீதுள்ள கட்டிடங்கள், மரங்கள் பயிர்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் இரண்டு ஏக்கர் முப்பத்தொன்று தசம் ஆறு பூச்சியம் பேர்ச்சுக்களை (2ஏ. 0றூ. 31.60பே.) கொண்டுள்ளது.

காணித்துண்டம் 1 எனவடையாளமிடப்பட்ட மேற்படி விவரிக்கப்பட்ட காணித்துண்டு, உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஜீ எம் கமல் பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2015 ஒற்றோபர் 13 ஆந்தேதிய 219/2015 ஆம் இலக்க அண்மைய நிலஅளவை வரைபடத்தின்படி பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது:

மேல் மாகாணம் களுத்துறை மாவட்டத்தில் ராய்கம் கோறளையின் கும்புக்கே பத்துவில் ஹொறண பிரதேசசபை எல்லைகளினுள்ளும் ஹொறண பிரதேச செயலகப் பிரிவினுள்ளும் ஹலாபிட்டிய 606C இன் கிராம அலுவலர் பிரிவினுள்ளும் கொடிகமுவக் கிராமத்தில் ரணவிரு மாவத்தைவழியாக அமைந்துள்ளதும் எட்டபன்விலதெனிய எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நில அளவையாளர் ஜீ. எம். கமல் பெரேரா என்பவினால் தயாரிக்கப்பட்ட 2015 ஒற்றோபர் 13 ஆந் திகதிய 219/2015 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 1 எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்: சொல்லப்பட்ட காணித்துண்டம் 1 பின்வரும் எல்லைகளையுடையது: வடக்கு : எச். எஸ். கருணாரத்ன மற்றும் ஜேடி சேதிரிஸினால் உரிமைகோரப்பட்ட காணிகள்; கிழக்கு : பபிலிஸ் கருணாரத்னவினால் உரிமைகோரப்பட்ட நொல்வயலும் வீதியும் (20 அடி அகலம்); தெற்கு : ஈட்டின் சிங்கோ, அன்டி சிங்கோ மற்றும் ஏனையோரினால் உரிமைகோரப்பட்ட காணிகள் மற்றும்; மேற்கு : ஈட்டின் சிங்கோ, அன்டி சிங்கோ மற்றும் ஏனையோரினாலும், எச். எஸ். கருணாரத்ன மற்றும் ஜேடி சேதிரிஸினாலும் உரிமைகோரப்பட்ட காணிகள், பரப்பளவில் இது, அதன்மீதுள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் இரண்டு ஏக்கர் முப்பத்தொன்று தசம் ஆறு பூச்சியம் பேர்ச்சுக்களை (ஏ2, ரூ0, பே31.60) கொண்டுள்ளது.

**957 ஆம் இலக்க ஈட்டுமுறிமீது ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மேல் மாகாணம் கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டிக் கோறளையின் பள்ளே பத்துவில் ஸ்ரீ ஜயவர்தனபுர-கோட்டே மாநகர சபை எல்லைகளினுள்ளும் ஸ்ரீ ஜயவர்தனபுர-கோட்டே பிரதேச செயலகப் பிரிவினுள்ளும் நுகேகொட, 519 கிராம அலுவலர் பிரிவில் பாகொடயில் அமைந்துள்ளதும், தேவால வீதியில் 36 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைத் தற்போது கொண்டதும் கஹட்டகஹாபில்லேவ எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். விக்ரமசிங்க என்பவரினால்தயாரிக்கப்பட்ட 2012,செத்தெம்பர் 02 ஆந்தேதிய 6637/9000 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் XI எனவடையளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்: அதன் எல்லைகள் பின்வருமாறு : வடகிழக்கு : தேவாலய வீதியில் 34/2 மற்றும் 38 ஆம் வரிமதிப்பீட்டிலக்கங்களைக்கொண்ட வளவுகள் மற்றும் வீதி (3 செமீ அகலம்) (உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ் விக்ரமசிங்க என்பவரினால் தயாரிக்கப் பட்ட 7302 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1C), தென்கிழக்கில் : கஹட்டகஹாபில்லாவ எனவழைக்கப்படும் காணி; தென்மேற்கில்: நீர்வழி மற்றும்; வடமேற்கில்: உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எம் சமரநாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 10010 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 7 மற்றும் தேவால வீதியில் 34/2 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட வளவுகள், பரப்பளவில் இது, இருபது தசம் இரண்டு ஐந்து போர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 20.25பே.) அல்லது 0.0512 ஹெக்டெயர்களைக் கொண்டுள்ளதுடன் தெல்கந்தக் காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுமுள்ளது.

உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ் விக்ரமசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 7302 ஆம் இலக்க வரைபடத்தில்

குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டம் 1C மற்றும் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எம் சமரநாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2007.02.01 ஆந் திகதிய 10010 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டம் 7 என்பவற்றின் மீதான மற்றும் அவைநெடுகிலுமான செல்வழியுரிமையுடன் சேர்த்து.

**961 ஆம் இலக்க ஈட்டுமுறிமீது ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

இலங்கைக் குடியரசின் மேல் மாகாணம் களுத்துறை மாவட்டத்தில் வெல்மில்ல, ஹலாபிட்டிய' மல்வத்த, ரணவிரு மாவத்தை, 458/1 ஆம் இலக்க வளவுகளிலும் அதன்மீதும் இப்போது கிடக்கின்ற அல்லது களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கின்ற தேயிலைக் கையிருப்புகள், பொதியிடும் பொருட்கள், சுவையூட்டிகள், சுட்டுத்துண்டுகள், நூல்கள், நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை மற்றும் செய்துமுடித்த பண்டங்கள் என்பனவுட்பட, வியாபாரக்கையிருப்பு, வணிகப்பொருட்கள், பொருட்களும் சாமான்களும், மூலப்பொருட்கள், நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை, செய்துமுடித்த பண்டங்கள் மற்றும் செய்து முடிக்கப்படாத பண்டங்களின் முழுமையும் அத்துடன் கம்பெனி இப்போது தொழில் கொண்டு நடாத்துகின்ற அத்துடன் இதன்பின்னர் எந்நோத்திலும் காலத்துக்குக்காலமும் தொழில் கொண்டுநடாத்தக்கூடிய அல்லது சொல்லப்பட்ட வியாபாரக் கையிருப்பு, வணிகப்பொருட்கள், பொருட்களும் சாமான்களும், மூலப்பொருகள், நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை, செய்துமுடித்த பண்டங்களும் செய்துமுடிக்கப்படாத பண்டங்களும் வேறெல்லா இனங்களும் எத்தகைய வகையினதுமான அல்லது தன்மையினதுமான வேறு அசைவுள்ள ஆதனமும் என்பன காலத்துக்குக்காலம் களஞ்சியப்படுத்தப்படக்கூடிய, வைத்திருக்கப்படக்கூடிய அல்லது கிடக்கக்கூடிய வேறெவையேனும் கிட்டங்கிகளிலும் களஞ்சியங்களிலும் வளவுகளிலும் அத்துடன் இச்சாதனம் தொடர்ந்திருக்கும்போது வியாபாரக் கையிருப்பு, வணிகப் பொருட்கள், பொருட்களும் சாமான்களும், மூலப்பொருட்கள், நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை, செய்துமுடித்த பண்டங்களும் செய்துமுடிக்கப்படாத பண்டங்களும் வேறெல்லா இனங்களும் எத்தகைய வகையினதுமான அல்லது தன்மையினதுமான வேறு அசைவுள்ள ஆதனமும் என்பவற்றின் முழுமையும் களஞ்சியப்படுத்தப்படக்கூடிய, வைத்திருக்கப்படக்கூடிய அல்லது கிடக்கக்கூடிய கிட்டங்கிகளிலும் களஞ்சியங்களிலும் வளவுகளிலும் அவற்றின்மீதும் உள்ள அத்துடன் இதன்பின்னர் எந்நேரத்திலும் காலத்துக்குக்காலமும் எல்லா நேரங்களிலும் மேற்கூறப்பட்ட கிட்டங்கிகளினுள், களஞ்சியங்களினுள் மற்றும் வளவுகளினுள் கொண்டுவரப்படவேண்டிய அல்லது கொண்டுவரப்படக்கூடிய, வைத்திருக்கப்படவேண்டிய அல்லது வைத்திருக்கப்படக்கூடிய அல்லது கிடக்கவேண்டிய அல்லது கிடக்கக்கூடிய கிட்டங்கிகளிலும் களஞ்சியங்களிலும் வளவுகளிலும் அவற்றின்மீதும் மற்றும் கம்பெனி இதன்பின்னர் எந்நேரத்திலும் காலத்துக்குக்காலமும் அதன் தொழிலை அல்லது வியாபாரத்தை அப்புறப்படுத்தவேண்டிய அல்லது அப்புறப்படுத்தக்கூடிய அல்லது அதன் தொழிலை அல்லது வியாபாரத்தைக் கொண்டு நடாத்தவேண்டிய அல்லது கொண்டு நடாத்தக்கூடிய அல்லது சொல்லப்பட்ட வியாபாரக் கையிருப்பு, வணிகப் பொருட்கள், பொருட்களும் சாமான்களும், மூலப்பொருட்கள், நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை, செய்துமுடித்த பண்டங்களும் செய்துமுடிக்கப்படாத பண்டங் களும் வேறெல்லா இனங்களும் எத்தகைய வகையினதுமான அல்லது தன்மையினதுமான வேறு அசைவுள்ள ஆதன மும் என்பன எந்நேரத்திலும் காலத்துக்குக்காலமும் களஞ்சியப் படுத்தப்படவேண்டிய வேறேதேனும் தொழிலிடத்திலும் அல்லது வேறெவையேனும் தொழிலிடங்களிலும் மேற்கூறப்பட்ட கிட்டங்கிகளுக்கு, களஞ்சியங்களுக்கு மற்றும் வளவுகளுக்கு அல்லது தொழிலிடங்களுக்கு அல்லது அவற்றிலிருந்து இடைப் பெயர்விலுள்ள அல்லது சொல்லப்பட்ட குடியரசில் களுத்துறை மாவட்டத்தில் துறை மேடையில் அல்லது குதங்களில் கப்பலேற்றப்படுவதற்கு அல்லது விடுவிக்கப்படுவதற்குக் காத்திருக்கும் மேற்கூறப்பட்ட எல்லா ஆதனமும் உட்பட, எத்தகையவகையினவையுமான அல்லது தன்மையினவையுமான வேறெல்லா இனங்களும் வேறு அசைவுள்ள ஆதனமும்.

சபையின் கட்டளைப்படி

கம்பெனிச் செயலாயளர்,
டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ.

10-486

---

**சம்பத் வங்கி பீ. எல். சீ.**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கே. எல். டீ. ஆர். ஆர். தேவப்பிரிய
கணக்கு இல.: 1023 5749 3725

2019, ஒகத்து மாதம் 29 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:-

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு-2, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக குருநாகல் பிரிசித்த நொத்தாரிசுவான ஏ. ஜே. பண்டார என்பவரினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017, திசெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 5524 எனும் ஈட்டு முறியின்மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில்

நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டவர்கள் என்ற வகையில் கடன்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கிரிஹெட்டி லியனகே டொன் ரோலண்ட் ரஞ்சித் தேவப்பிரிய என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இல. 5524 எனும் ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் எழுபத்தி ஏழு இலட்சத்து ஐம்பத்தி ஒன்பதினாயிரத்து நாநூற்று பத்து ரூபா தொண்ணூற்றி ஆறு சதம் (ரூபா 77,59,410.96) 2019, யூலை 17 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட எழுபத்தி ஏழு இலட்சத்து ஐம்பத்தி ஒன்பதினாயிரத்து நாநூற்று பத்து ரூபா தொண்ணூற்றி ஆறு சதம் (ரூபா 77,59,410.96) 2019, யூலை 18 ஆந் திகதி முதல் இல. 5524 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை எழுபத்தி ஐந்து இலட்சம் ரூபா (ரூபா 75,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு ஆறு வீதம் (6%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 5524 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான கே. பீ. என். சில்வா என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.".

### அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், பிட்டிகல் கோரளே கட்டுகம்பொல ஹத்பத்து பன்னல பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் பாஹால மாக்கந்துர இல. 1589 கிராம அலுவலர் பிரிவின் மாக்கந்துர தற்போது பாஹால மாக்கந்துர கிராமத்தில் அமைந்த "மீகாஹாமுலவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. டீ. பிரேமசிறி என்பவரால் தயாரிக்கப்பட்ட 2011, நவெம்பர் 14 ஆந் திகதியிடப்பட்ட இல. 11148/ A எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர். பீ. நவரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 3620 எனும் வரைபடத்தின் லொட் 1 இன் எஞ்சிய பகுதி; கிழக்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. டீ. பிரேமசிறி என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 11147/A எனும் வரைபடத்தின் லொட்கள் 2 மற்றும் 3 என குறிப்பிடப்பட்ட வீதி; தெற்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர். பீ. நவரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 3620 எனும் வரைபடத்தின் லொட் 3 மற்றும் ; மேற்கு : எஸ். ஏ. வீரசிங்ஹ உரிமம் கோரும் காணி மற்றும் எம். எம். லயனல் முனசிங்ஹ மற்றும் ஏனையோர் உரிமம் கோரும் காணி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பத்தி மூன்று தசம் இரண்டு ஒன்பது பேர்ச் (0ஏ.0றூ.33.29பே.) அல்லது 0.0842 ஹெக்டேயர்கள் (Hec) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 11147/A எனும் வரைபடத்திற்கு அமைய குளியாபிட்டிய காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் E 7/68 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10-475/5

---

### சம்பத் வங்கி பீ. எல். சீ.

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

ருக்ஷான் இலக்ட்ரிகல்ஸ் மற்றும் கே. எல். டீ. ஆர். ஆர். தேவப்பிரிய

கணக்கு இலக்கங்கள் : 0023 1000 2979 மற்றும் 0023 5003 2757/1023 5749 3725

2019, ஓகத்து மாதம் 29 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:-

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு-2, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக குருநாகல் பிரசித்த நொத்தாரிசுவான ஏ. ஜே. பண்டார என்பவரினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017, ஒற்றோபர் 31 ஆந் திகதியிடப்பட்ட இல. 5460 மற்றும் 2018, மாச்சு

*16 ஆந் திகதியிடப்பட்ட இல. 5642 மற்றும் 5644 எனும் ஈட்டு முறிகளின்மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டார் என்ற வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பெயர் மற்றும் வடிவில் "ருக்ஷான் இலக்ட்ரிகல்ஸ்" எனும் வியாபாரத்தின் ஏக உரிமையாளரான கடன்பட்டார் எனும் வகையில் கிரிஹெட்டி லியனகே டொன் ரோலண்ட் ரஞ்சித் தேவப்பிரிய என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், இலக்கங்கள் 5460, 5642 மற்றும் 5644 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் ஒரு கோடியே எழுபத்தி இரண்டு இலட்சத்து ஐம்பத்தி ஐந்தாயிரத்து நாநூற்று முப்பத்தி எட்டு ரூபா எண்பத்தி நான்கு சதம் (ரூபா 1,72,55,438.84) 2019, யூலை 17 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட ஒரு கோடியே எழுபத்தி இரண்டு இலட்சத்து ஐம்பத்தி ஐந்தாயிரத்து நாநூற்று முப்பத்தி எட்டு ரூபா எண்பத்தி நான்கு சதம் (ரூபா 1,72,55,438.84) 2019, யூலை 18 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 5460, 5642 மற்றும் 5644 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஐம்பது இலட்சம் ரூபா (ரூபா 50,00,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதின் ஆறு தசம் ஐந்து வீதம் (16.5%) மேலும் தொண்ணூற்று ஆறு இலட்சத்து அறுபத்தி ஆராயிரத்து அறுநூற்று அறுபது ரூபா (ரூபா 96,66,660.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு ஆறு வீதம் (6%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 5460, 5642 மற்றும் 5644 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான கே. பீ. என். சில்வா என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.".*

***முதலாவது அட்டவணை***

*வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், குடாகல்பொட கோரளே வேஉட வில்லி ஹத்பத்து குருநாகல் பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் மஸ்பொத்த பிரதேச செயலாளர் பிரிவின் சியம்பலன்கமுவ இல. 791 கிராம அலுவலர் பிரிவின் சியம்பலாகமுவ கிராமத்தில் அமைந்த "கடுல்பொத்த ஹேன்யாய தற்போது மைத்திரிவாச வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். வெலகெதர என்பவரால் தயாரிக்கப்பட்ட 2004,ஓகத்து 31 ஆந்திகதியிடப்பட்ட இல. 4084 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : இதே வரைபடத்தின் லொட்கள் 4 மற்றும் 2 ; கிழக்கு : இதே காணியின் லொட் 2 மற்றும் புத்தளம் முதல் கொனாகம வரையான வீதி; தெற்கு : சீலவத்தி ஆரமய அமைந்துள்ள காணி மற்றும் ; மேற்கு: இதே காணியின் லொட் 6, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு றூட் மற்றும் முப்பது பேர்ச் (0ஏ.2றூ.30பே.) அல்லது 0.2782 ஹெக்டேயர்கள் (Hec.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 4084 எனும் வரைபடத்திற்கு அமைய குருநாகல் காணிப்பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் K 24/147 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

*கம்பனிச் செயலாளர்.*

*10-475/6*

---

***சம்பத் வங்கி பீ. எல். சீ.***

*( முன்பு சம்பத் வங்கி லிமிட்டட் என அழைக்கப்பட்டது)*

*2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

*கே. எச். ஜீ. ரீ. கே. ஜயரத்ன*
*கணக்கு இல.: 0030 5002 4376*

*2019, ஓகத்து மாதம் 29 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:-*

*"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு - 2, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசான கே. ஏ. டீ. சுபசிங்ஹ என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017, ஏப்பிறல் 27 ஆந் திகதியிடப்பட்ட இல 4180, 2017, ஒற்றோபர் 26 ஆந்*

திகதியிடப்பட்ட இல. 4632 மற்றும் 2019, சனவரி 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 5640 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக் கொண்ட கடனை, கடமைப்பட்டவர்கள் என்ற வகையில் கடன் பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கட்டுமெட்டியாவே ஹிந்த்தர கெதர துசித்த குமார ஜயரத்ன என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இலக்கங்கள் 4180, 4632 மற்றும் 5640 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் தொண்ணூற்றி ஐந்து இலட்சத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தி மூன்று ரூபா பதின் மூன்று சதம் (ரூபா 95,07,963.13) 2019, ஓகத்து 06 ஆந் திகதி சம்பத் வங்கிப் பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட தொண்ணூற்றி ஐந்து இலட்சத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தி மூன்று ரூபா பதின்மூன்று சதம் (ரூபா. 95,07,963.13) 2019, ஓகத்து 07 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 4180, 4632 மற்றும் 5640 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை இருபத்தி மூன்று இலட்சத்து நாற்பத்தி மூவாயிரத்து முந்நூற்று நாற்பத்தி ஐந்து ரூபா நான்கு சதம் (ரூபா 23,43,345.04) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) மேலும் அறுபத்தி ஏழு இலட்சத்து பதின் மூவாயிரத்து ஐந்நூற்று எண்பது ரூபா இருபத்தி மூன்று சதம் (ரூபா. 67,13,580.23) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் மூன்று தசம் ஐந்து வீதம் (13.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 4180, 4632 மற்றும் 5640 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான கே. பீ. என். சில்வா என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப் பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.".

### அட்டவணை

வட மேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், பிட்டிகள் கோரளே, தெற்கு கம்மல் பத்துவின் வென்னப்புவ பிரதேச சபை எல்லைகளுக்குள், மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் கொலின்ஜாடிய வடக்கு இல. 174 கிராம அலுவலர் பிரிவின் கொலின்ஜாடிய கிராமத்தில் அமைந்த "தொம்பகாஹா கொடபிம" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வை. எம். ஆர் யாப்பா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2012, மே 21 ஆந் திகதியிடப்பட்ட இல. 12294 ஆனால் மிகத்திருத்தமாக உத்தரவுபெற்ற நில அளவையாளர் வை. எம். ஆர். யாப்பா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2012, மே 21 ஆந் திகதியிடப்பட்ட இல. 12694 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிடப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : ரோச குசும மாவத்தை ; கிழக்கு: ஜோஜ் அப்புஹாமியின் காணி ; தெற்கு : மார்வின் ஜோசப் பெர்ணாண்டோ உரிமம் கோரும்காணிமற்றும்;மேற்கு:உத்தரவுபெற்றநிலஅளவையாளர் வை. எம். ஆர். யாப்பா என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 677 எனும் வரைப்படத்தின் லொட் 1, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்தி நான்கு தசம் ஒன்று பேர்ச் (0ஏ. 0றூ. 24.1பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 12294 எனும் வபைடத்திற்கு அமைவாக மாரவில காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் G 170/242 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்

கம்பனிச் செயலாளர்.

10 - 475/7

---

### சம்பத் வங்கி பீ. எல். சீ.

( முன்பு சம்பத் வங்கி லிமிட்டட் என அழைக்கப்பட்டது)

*2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

ஜே. கே. ஐ. கே. டீ. பெரேரா மற்றும் ஜே. கே. ரீ. பீ. பெரேரா
கணக்கு இல.: 0132 5000 3832

2019, ஓகத்து மாதம் 29 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:-

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு - 2, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசுவான கே. ஏ. டீ. சுபசிங்ஹ என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017, செத்தெம்பர் 07 ஆந் திகதியிடப்பட்ட இல 4517, 2018, செத்தெம்பர் 04 ஆந் திகதியிடப்பட்ட இல. 5315 மற்றும் 2016, யூன் 07 ஆந் திகதியிடப்பட்ட இல. 3438 எனும் ஈட்டு முறிகளின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள

சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக் கொண்ட கடனை, கடமைப்பட்டவர்கள் என்ற வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஜயசூரிய குரனகே இந்ராணி கிரிஷாந்தா டெல்ரின் பெரேரா மற்றும் ஜயசூரிய குரனகே டெலஸ் பிரியந்த பெரேரா என்பவர்ளில் கடன் பட்டவர் என்ற வகையில் கூறப்பட்ட ஜயசூரிய குரனகே டெலஸ் பிரியந்த பெரேரா என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால்,

“PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு - 2, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசுவான கே. ஏ. டீ. சுபசிங்ஹ என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016, யூன் 07 ஆந் திகதியிடப்பட்ட இல 3436, மற்றும் செத்தெம்பர் 04 ஆந் திகதியிடப்பட்ட இல. 5317 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக் கொண்ட கடனை, கடமைப்பட்டவர்கள் என்ற வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஜயசூரிய குரனகே இந்ராணி கிரிஷாந்தா டெல்ரின் பெரேரா மற்றும் ஜயசூரிய குரனகே டெலஸ் பிரியந்த பெரேரா என்பவர்ளில் கடன் பட்டவர் என்ற வகையில் கூறப்பட்ட ஜயசூரிய குரனகே இந்ராணி கிரிஷாந்தா டெல்ரின் பெரேரா என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால்,

கூறப்பட்ட இலக்கங்கள். 4517, 5315, 3438, 3436 மற்றும் 5317 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் இரண்டு கோடியே எழுபத்தி மூன்று இலட்சத்து ஆறாயிரத்து அறுபத்தி எட்டு ரூபா ஐம்பத்தி மூன்று சதம் (ரூபா 2,73,06,068.53) 2019 யூலை 09 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட இரண்டு கோடியே எழுபத்தி மூன்று இலட்சத்து ஆறாயிரத்து அறுபத்தி எட்டு ரூபா ஐம்பத்தி மூன்று சதம் (ரூபா. 2,73,06,068.53) 2019, யூலை 10 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 4517, 5315, 3438, 3436 மற்றும் 5317 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கம் திகதி வரை இரண்டு கோடியே ஐம்பத்தி ஒன்பது இலட்சம் ரூபா (ரூபா 2,59,00,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின்ஏழு வீதம் (17%) விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 4517, 5315, 3438, 3436 மற்றும் 5317 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுளள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான கே. பீ. என். சில்வா என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

1. வட மேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், பிட்டிகள் கோரளே, ஓத்தர பலாத்த வென்னப்பவ பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் லுனுவில தெற்கு கிராம அலுவலர் பிரிவின் லுனுவில கிராமத்தில் “இல. 51 L. ஏற்ற காணி” என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. எஸ். எஸ். ஏ. பெர்ணாண்டோ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2017, யூலை 12 ஆந் திகதியிடப்பட்ட இல. 6083 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிடப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : பிரதான வீதியிலிருந்து வீடுகள் வரையான வீதி (பிரதேச சபை) ; கிழக்கு : வீதி மற்றும் ஷார்லி பெரேரா உரிமம் கோரும்காணி ; தெற்கு : மிலீ லேய்ட்டன் உரிமம் கோரும் காணி மற்றும் ; மேற்கு : சுனில் லேய்ட்டன் உரிமம் கோரும் காணி மற்றும் பெரேரா உரிமம் கோரும் காணி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பத்தி எட்டு தசம் ஒன்பது சைபர் பேர்ச் (0ஏ. 0றூ. 38.90.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 6083 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

மேற் கூறப்பட்ட இல. 6083 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 1 கீழே காட்டப்பட்ட காணயின் மீள் அளவீடாகும்:

மேற் கூறப்பட்ட லுனுவிலையில் அமைந்த “ I இல. 51 ஐ ஏற்ற காணி” என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ரீ. கே. தனசேன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1997 சனவரி 20 ஆந் திகதியிடப்பட்ட இல. 1909 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிடப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : பிரதான வீதியிலிருந்து வரும் வீதி; கிழக்கு : வீதி மற்றும் ஷார்லி பெரேரா உரிமம் கோரும் காணி ; தெற்கு : மிலீ லேய்ட்டன் உரிமம் கோரும் காணி மற்றும் ; மேற்கு: சுனில் லேய்ட்டன் உரிமம் கோரும் காணி மற்றும் பெரேரா உரிமம் கோரும் காணி மற்றும், ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பத்தி எட்டு தசம் ஒன்பது சைபர் பேர்ச் (0ஏ. 0றூ. 38.90பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1909 எனும் வரைபடத்திற்கு அமைவாக மாரவில காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் G 248/92 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இல. 4517 மற்றும் 5315 எனும் ஈட்டு முறிகளின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

2. வட மேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், பிட்டிகள் கோரலே மெத பலாத்த நாத்தண்டிய பிரதேச சபை எல்லைகளுக்குள், மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் துன்கன்னாவ கிராம அலுவலர் பிரிவின் துன்கன்னாவ தப்போவ மற்றும் சந்தனன்கமையில் அமைந்த “சித்தவான தோட்டம்” என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர். பீ. நவரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1997, ஏப்பிறல் 05 ஆந் திகதியிடப்பட்ட இல. 3530 எனும்

வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்த எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 7 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : இங்கமைந்த லொட் 13 ; கிழக்கு : இங்கமைந்த லொட் 8 ; தெற்கு : இங்கமைந்த லொட் 25 மற்றும்; மேற்கு : இங்கமைந்த லொட் 6, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்தகாணியின் விஸ்தீரணம் பதின் ஒரு பேர்ச் (0ஏ. 0றூ. 11பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 3530 எனும்வபைடத்திற்கு அமைவாக மாரவில காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் J 106/103 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. மேற் கூறப்பட்ட துன்கன்னாவ தப்போவ மற்றும் சந்தனன்கமையில் அமைந்த “சித்தவான தோட்டம்” என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர். பீ. நவரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1997, ஏப்பிறல் 05 ஆந் திகதியிடப்பட்ட இல. 3530 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 8 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : இங்கமைந்த லொட் 13 ; கிழக்கு : இங்கமைந்த லொட் 9 ; தெற்கு: இங்கமைந்த லொட் 25 மற்றும்; மேற்கு : இங்கமைந்த லொட் 7, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதினொரு பேர்ச் (0ஏ. 0றூ. 11பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 3530 எனும் வபைடத்திற்கு அமைவாக மாரவில காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் J 106/107 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற் கூறப்பட்ட இல. 3530 எனும் வரைப்படத்தில் காட்டப்பட்ட லொட் 6 (20 அடி அகல வீதி) மற்றும் லொட் 13 (பிரதான வீதிக்கான ஒதுக்கம்) இன் மீதும் அதன் கீழும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடானானது.

(இல. 3438 எனும் ஈட்டு முறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது)

4.வடமேல்மாகாணம்,புத்தளம்மாவட்டம்,பிட்டிகள்கோரலே மெத பலாத்த உடுபெத்தேவ பிரதேச சபை எல்லைகளுக்குள், மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் புன்னேஹேபொல கிராம அலுவலர் பிரிவின் புன்னேஹேபொல கிராமத்தில் அமைந்த “புன்னேஹேபொல வத்துயாயா” என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. வீ. லியனகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 2014, நவெம்பர் 20 ஆந் திகதியிடப்பட்ட இல. 3128 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். எம். ஏ. ஆர். பீ. ஹேரத் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2013, ஒற்றோபர் 11 ஆந் திகதியிடப்பட்ட இல. 13624 எனும் வரைபடத்தில் லொட் 1 ; கிழக்கு : நிமல் என்பவர் உரிமம் கோரும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர். பீ. நவரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 392 எனும் வரைபடத்தில் லொட் 1A2, உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர். பீ. நவரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2014, ஒற்றோபர் 12 ஆந் திகதியிடப்பட்ட இல. 3047 எனும் வரைபடத்தில் லொட் 1 மற்றும் 2, சரோஜா என்பவர் உரிமம் கோரும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர். பீ. நவரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 392 எனும் வரைபடத்தில் லொட் 1A2 ; தெற்கு : வசிப்பவர்களுக்காக அரசினால் ஒதுக்கப்பட்ட காணிகள் மற்றும் ; மேற்கு : வசிப்பவர்களுக்காக அரசினால் ஒதுக்கப்பட்ட காணிகள், ஆர். பீ. நவரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 260 எனும் வரைபடத்தில் லொட் 1 மற்றும் கூறப்பட்ட இல. 13624 எனும் வரைபடத்தில் லொட் 1, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் ஒரு றூட் மற்றும் நான்கு பேர்ச் (1ஏ. 1றூ. 4பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 3128 எனும் வபைடத்திற்கு அமைவாக குளியாபிட்டிய காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 128/71 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இல. 3436 மற்றும் 5317 எனும் ஈட்டு முறிகளின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10 - 475/8

---

**சம்பத் வங்கி பீ. எல். சீ.**

( முன்பு சம்பத் வங்கி லிமிட்டட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

வீ. எஸ். ரீ. டி. மெல் மற்றும் ரீ. ஜீ. பீ. குணசேக்கர
கணக்கு இல.: 0177 5000 5357

2019, ஓகத்து மாதம் 29 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:-

“PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு - 2, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசுவான ஏ. ஏ. ஆர். உதயங்க என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018, நவெம்பர் 19 ஆந் திகதியிடப்பட்ட இல. 595 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டவர்கள் என்ற வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் விதானெலாகே ஷெனோன் டிரென்குயில் டி. மெல் மற்றும்

தெல்கெ கிஹானி பியும்ரா குணசேக்கர எனும் தெல்கெ கிஹானி பியும்ரா பீரிஸ் என்பவர்களில் கடன் பட்டவர் என்ற வகையில் தெல்கெ கிஹானி பியும்ரா குணசேக்கர எனும் தெல்கெ கிஹானி பியும்ரா பீரிஸ் என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இல. 595 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் ஒரு கோடியே நாற்பத்தி நான்கு இலட்சத்து தொண்ணூற்றி நான்காயிரத்து அறுநூற்று அறுபத்தி ஒன்பது ரூபா எண்பத்தி ஆறு சதம் (ரூ. 1,44,94,669.86) 2019, யூலை 17 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிட்ட ஒரு கோடியே நாற்பத்தி நான்கு இலட்சத்து தொண்ணூற்றி நான்காயிரத்து அறுநூற்று அறுபத்தி ஒன்பது ரூபா எண்பத்தி ஆறு சதம் (ரூ. 1,44,94,669.86) 2019, யூலை 18 ஆந் திகதி முதல் இல. 595 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடி நாற்பது இலட்சம் ரூபா (ரூ. 1,40,00,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டு கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 595 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.".

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளே, பல்லே பத்துவையில் மொரட்டுவை நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் ராவதாவத்த கிழக்கு கிராம அலுவலர் பிரிவின் ராவதாவத்தையில் அமைந்த ராவதாவத்த வீதி, வரிமதிப்பீட்டு இல. 77/3 ஐ ஏற்ற "லியனகே டீமன்வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். ஜே. பீரிஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2003, ஓகத்து 12 மற்றும் 30 ஆந் திகதியிடப்பட்ட இல. 5881 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிடப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : எம். சீ. வீதி (பொல்கடுவ பட்டுமக) ; கிழக்கு : இல. 1181 எனும் வரைப்படத்தின் லொட் 6 எனும் காணி; தெற்கு : இல. 1181 எனும் வரைப்படத்தின் லொட் 1 எனும் காணி மற்றும் ; மேற்கு : இல. 1181 எனும் வரைப்படத்தின் லொட் 4ஏ எனும் காணி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதின் நான்கு தசம் இரண்டு சைபர் பேர்ச் (0ஏ. 0றூ. 14.20பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 5881 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

மேற் கூறப்பட்ட லொட் 1 கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

மேற் கூறப்பட்ட ராவதாவத்தையில் அமைந்த லியனகே டீமன்வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். ஐ. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1986, திசெம்பர் 02 ஆந் திகதியிடப்பட்ட இல. 1181 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 5 மற்றும் $4^{B}$ எனக் குறிடப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : றாட் 7 (பொல்கடுவ பட்டுமக என்றழைக்கப்படும் நகர சபை வீதி); கிழக்கு : இல. 1811 எனும் வரைப்படத்தின் லொட் 6 (மிகத் திருத்தமாக 1181) ; தெற்கு : இல. 1811 எனும் வரைப்படத்தின் லொட் 1 (மிகத் திருத்தமாக 1181) மற்றும் ; மேற்கு : இல. 1811 எனும் வரைப்படத்தின் லொட் 4ஏ மற்றும் 3 (மிகத் திருத்தமாக 1181) ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதின் மூன்று தசம் எட்டு எட்டு பேர்ச் (0ஏ. 0றூ. 13.88பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதற்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1181 எனும் வரைபடத்திற்கு அமைவாக தெல்கந்தை - நுகேகொடை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் D265/80 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10 - 476

---

**சம்பத் வங்கி பீ. எல். சீ.**

( முன்பு சம்பத் வங்கி லிமிட்டட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

ஏ. டீ. பீ. ஆர். விஜேதுங்க மற்றும் ஏ. டீ. சீ. என். விஜேதுங்க
கணக்கு இல.: 0114 5000 2323

2019, ஓகத்து மாதம் 29 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:-

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு - 2, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசுவான சீ. ஜீ. அபேவிக்ரம என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018, ஏப்பிறல்

05 ஆந் திகதியிடப்பட்ட இல. 3327 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டவர்கள் என்ற வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அத்துகோரலகே டொன் பிரியந்த்யா ரங்க விஜேதுங்க மற்றும் அத்துகோரலகே தோனா சத்தூரி நிஷாந்தி விஜேதுங்க என்பவர்களில் கடன்பட்டவர் என்ற வகையில் அத்துகோரலகே டொன் பிரியந்த்யா ரங்க விஜேதுங்க என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இல. 3327 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் ஒரு கோடியே எழுபத்தி எட்டு இலட்சத்து ஐம்பத்தி ஏழாயிரத்து எழுநூற்றி எண்பத்தி மூன்று ரூபா அறுபத்தி ஏழு சதம் (ரூ. 1,78,57,783.67) 2019, யூலை 12 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிட்ட ஒரு கோடியே எழுபத்தி எட்டு இலட்சத்து ஐம்பத்தி ஏழாயிரத்து எழுநூற்றி எண்பத்தி மூன்று ரூபா அறுபத்தி ஏழு சதம் (ரூ. 1,78,57,783.67) 2019, யூலை 13 ஆந் திகதி முதல் இல. 3327 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை தொண்ணூற்றி ஐந்து இலட்சத்து எண்பத்தி ஓராயிரத்து அறுநூற்றி இருபத்தி ஆறு ரூபா தொண்ணூற்றி ஒன்பது சதம் (ரூபா 95,81,626.99) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் ஆறு தசம் ஐந்து வீதம் (16.5%) மேலும் எழுபத்தி ஐந்து இலட்சத்து எண்பதினாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தி ஏழு ரூபா நான்கு சதம் (ரூபா. 75,80,927.04) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்க இருபத்தி எட்டு வீதம் (28%) விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டடணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 3327 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமமைனகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான கே. பீ. என். சில்வா என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.".

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளே, பல்லே பத்துவின், மாஹாரகமை நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் உடஹாமுல்ல கிழக்கு இல. 525ஏ கிராம அலுவலர் பிரிவின் உடஹாமுல்லையில் அமைந்த போதிய வீதி, வரிமதிப்பீட்டு இல. 6 ஐ ஏற்ற "கொன்னகாஹாவத்த எனும் கொன்னகாஹாலந்த மற்றும் அலபொடவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. அமரசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2014, யூலை 29 ஆந் திகதியிடப்பட்ட இல. 4055 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 5A1 எனக் குறிடப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : இங்கமைந்த ஸ்ரீ போதி மஹா விஹாரை ; கிழக்கு : இங்கமைந்த எச். டீ. பிரன்ஸிஸ் இன் சொத்து ; தெற்கு : இங்கமைந்த லொட் 5A2 மற்றும் ; மேற்கு: இங்கமைந்து போதிய வீதி, ஆகிய இவ் எல்லைகளுக்கள் அமைந்த காணியின் விஸ்தீரணம் மூன்று றூட் பதினான்கு பேர்ச் (0ஏ. 3றூ. 14.00பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 4055 எனும் வரைபடத்திற்கு அமைவாக நுகேகொடை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் B 344/07 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10 - 480

---

### சம்பத் வங்கி பீ. எல். சீ.

( முன்பு சம்பத் வங்கி லிமிட்டட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

பீ. எம். எம். ஜின்னா மற்றும் எஸ். எம். முஸம்மில்
கணக்கு இல.: 1149 5704 3982

2019, ஓகத்து மாதம் 29 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:-

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொழும்பு 02, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாதம்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக அநுராதபுரம் பிரசித்த நொத்தாரிசான ஏ. ஜீ. கே. ஆலோக்கபண்டார என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016, ஓகத்து 01 மற்றும் 03 ஆந் திகதியிடப்பட்ட இல. 847 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு முதலாவது அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக் கொண்ட கடனை, கடமைப்பட்டவர்கள் என்ற வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பீர் முஹம்மது முஹம்மது ஜின்னா மற்றும் செய்யது முஹம்மது முஸம்மில் என்பவர்கள் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இல. 847 எனும் ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் ஐம்பத்தி நான்கு இலட்சத்து நான்காயிரத்து இருநூற்று இருபத்தி எட்டு

ரூபா பதின் ஏழு சதம் (ரூபா 54,04,228.17) 2019, யூலை 10 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட ஐம்பத்தி நான்கு இலட்சத்து நான்காயிரத்து இருநூற்று இருபத்தி எட்டு ரூபா பதின் ஏழு சதம் (ரூபா. 54,04,228.17) 2019, யூலை 11 ஆந் திகதி முதல் இல. 847 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித்த தீர்க்கும் திகதி வரை ஐம்பது இலட்சம் ரூபா (ரூபா 50,00,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் ஐந்து வீதம் (15%) விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 847 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலுதாரர்களான ஐ. டப்ளியூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎலசீ இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், கலாகம் பலாத்த உடுதுருவ கோரலே, மெதலஸ்ஸ துலான பாலகல பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் பாலலுவெவ கிராம அலுவலர் பிரிவின் பாலலுவெவ இல் அமைந்த "பரனகெதர வத்த மற்றும் புரானவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜீ. எம். கே. தென்னகோன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2015, ஒற்றோபர் 07 ஆந் திகதியிடப்பட்ட இல. 2015/ 533 எனும் வரைப்படத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட் காணியின் எல்லைகளாவன: வடக்கு: நாவூர் எதுமெ உரிமம் கோரும் காணி; கிழக்கு: வீதி (பி. ச); தெற்கு: இல. 2013/ 491 ஆம் எனும் வரைப்படத்தில் லொட் 2; மேற்கு: ஏ. எல். பிச்சம்மா உரிமம் கோரும் காணி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் (01ஏ. 00றூ. 00பே.) அல்லது 0.1011 ஹெக்டேயர் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதற்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2015/533 எனும் வரைப்படத்திற்கு அமைவானதாகும்.

